விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 146 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 31 புதன்கிழமை (14.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## மின்கட்டண திருத்தம் தொடர்பான வாக்குறுதிகள் பொய்த்துப் போயின

### ஹர்ஷ டி சில்வா சாடல்



(கொழும்பு)

மின்சாரக் கட்டணக் குறைப்புத் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி தேர்தல் மேடைகளில் வழங்கிய வாக்குறுதிகள் பொய்த்துப் போயுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா சுட்டிக் காட்டியுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்திருக்க வேண்டும்

### பிதற்றுகிறார் சரத் வீரசேகர



(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்த கையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மகிந்த தடை செய்திருக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் அரசியல்

15ஆம் பக்கம் பார்க்க

# ஊழல் மோசடிகள் இலங்கையில் தாராளம்

## இதனால் இங்கு முதலிட முடியவில்லை ஜப்பானியத் தூதுவர் பகிரங்கம்



(கொழும்பு)

இலங்கையின் ஊழல் மோசடிகளுக்கு ஜப்பான் இரையாகியுள்ளது. முதலீட்டு வாய்ப்புக்களை ஆராயும்போது இலங்கை முக்கிய இடத்தில் காணப்படுகின்ற போதிலும் நியாயமான, நம்பிக்கைமிக்க, வெளிப்படைத்தன்மையுடைய வர்த்தகச் சூழலை இங்கு அவதானிக்கக் கூடியதாக இல்லை என இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ இசோமாடோ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் அமைச்சரானார் ஹரி ஆனந்தசங்கரி



(ஒட்டாவா)

கனடாவின் புதிய அமைச்சரவையின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

அண்மையில் கனடாவில் இடம்பெற்ற பொதுத்

15ஆம் பக்கம் பார்க்க

## தன்னுயிர் கொடுத்து மகவின் உயிர்காத்த அன்னையின் பூதவுடல் நேற்று நல்லடக்கம்



(கொஸ்லாந்த)

அண்மையில் கொத்மலைப் பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் தன் உயிரைக் கொடுத்து தன் ஒன்பது மாத மகவினைக் காத்து அன்பின் அடையாள

15ஆம் பக்கம் பார்க்க

## இனப் படுகொலை நினைவுச்சின்னம் கனடாவுக்கு அதிருப்தி வெளியிடுக!

### அநுர அரசுக்கு நாமல் எம்.பி அழுத்தம்



(கொழும்பு)

அரசாங்கம் உடனடியாக கனேடிய உயர்ஸ்தானிகரை அழைத்து இனப்படுகொலை நினைவுச் சின்னம் தொடர்பான இலங்கையின் அதிருப்தியை தெரிவிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## தனது மகளை நஞ்சூட்டி கொல்ல முனைந்த தந்தை

### இளவாலையில் சம்பவம்

(இளவாலை)

தனது ஆறு வயதுப் பெண் பிள்ளைக்கு தந்தை உணவில் நஞ்சு கலந்து ஊட்டிய சம்பவம் ஒன்று இளவாலை - உயரப்புலம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

தந்தை ஊட்டிய உணவை உட்கொண்டதன் பின்னர் சிறுமியின் வாயிலிருந்து நுரை

15ஆம் பக்கம் பார்க்க

## நயினை பாதைப் படகு ஜலசமாதியடைந்தது



(நயினாதீவு)

குறிகாட்டுவான் - நயினாதீவு இடையே நீண்ட காலம் சேவையில் ஈடுபட்டிருந்த பாதைப் படகானது நேற்று நீரில் மூழ்கியது.

குறித்த படகானது பழுது

15ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் வலி சுமந்த ஊர்திப் பவனி

### நல்லூரிலிருந்து இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் வலி சுமந்த ஊர்திப் பவனி

15ஆம் பக்கம் பார்க்க

## ரணில் போல் அநுரவுக்கு தற்துணிவு கிடையாது

### விமல் வீரவன்ஸ தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா தொடர்பான ஒரு சில விடயங்களில் தற்துணிவுடன் செயற்பட்டார். அந்த தற்துணிவு ஜனாதிபதி அநுர குமார திஸா

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நிமிர்ந்து நிற்கும் உங்கள் நாளிதழ்

# பல ஆயிரம் கடந்த பதிவுகள்...

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள்

## கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)

உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் : 4000/= மட்டும்



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
076 097 3120
Email : Kalyanamalai.jaffna@gmail.com


# இ.போ.ச வவுனியாசாலை ஊழியர்களின் சம்பள விவகாரத்தில் இழுபறி

(வவுனியா)

இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலையின் ஊழியர்களுக்கான கடந்த மாத சம்பளம் இது வரை வழங்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

வவுனியா சாலையில் பணிபுரியும் சாரதிகள், காப்பாளர்கள், பொறியியல் துறை சார்ந்த ஊழியர்களுக்கே இவ்வாறு சம்பளம் வழங்கப்படவில்லை.

குறித்த ஊழியர்களுக்கு ஒவ்வொரு மாதமும் 8 ஆம் திகதி அவர்களுக்கான சம்பளம் வழங்கப்படுவது வழமை எனினும் குறித்த திகதி கடந்து ஐந்து நாட்களாகியும் இதுவரை கடந்த மாத சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பண்டிகைக் காலம் இடம்பெறுவரும் நிலையில் தமக்கான சம்பளம் வழங்கப்படாமையினால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக சாலை ஊழியர்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

(ந-4,7,250)

## லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் 2025ம் ஆண்டு DAM கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

### அடிப்படைத்தகைமைகள்

வயது எல்லை : 14.06.2025 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

கல்வித்தகைமை

- க.பொ.த (உ/த) உயிரியல் பிரிவில் 2 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
- பரம்பரை வைத்தியர்களின் வாரிசுகளாக இருந்தால் (உறுதிப்படுத்தல் வேண்டும்) க.பொ.த (உ/த) ஏதாவது பிரிவில் 2 பாடங் களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
- க.பொ.த (சா/த) பரீட்சையில் 2க்கு மேற்படாத தடவையில் விஞ்ஞானம், தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
- தாய் அல்லது தந்தை DAM அல்லது பரம்பரை வைத்தியர்களாயின் முன்னுரிமையும் விதி விலக்கு சலுகைகளும் உண்டு.

(4186)

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினையோ அல்லது லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி சுன்னாகத்தில் நேரடியாக விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றோ அதைப் பூரணப் படுத்தி அனுப்பி வைத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " 2025 சித்த ஆயுள்வேத டிப்ளோமா கற்கைநெறி " எனக் குறிப்பிட்டு அதிபர், லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவக் கல்லூரி, மின்சார நிலைய வீதி, சுன்னாகம். என்ற முகவரிக்கு 14.06.2025 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

தலைவர்
வட இலங்கை சுதேச வைத்திய சபை, யாழ்ப்பாணம்

# கண்ணீர் காணிக்கை



எமது பாடசாலையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற திருமதி சிறீஸ்கந்தராசா சிவாஜினி அவர்களது பாசமிகு கணவர்

## அமரர் சங்கரப்பிள்ளை சிறீஸ்கந்தராசா

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியை அறிந்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


(C-2957)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
(யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை)

# மரண அறிவித்தல்

## நாகரட்ணம் கந்தசாமி

('சாமியார்', உரிமையாளர் – ஞானதேவன் கராஜ்)



பிறப்பு 09.11.1930 இறப்பு 11.05.2025

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சிறாம்பியடி வீதியை பிறப்பிடமாகவும் மணிக்கூட்டு வீதி பெருமாள் கோவிலடியை நிரந்தர வசிப்பிடமாகவும், அம்மன் வீதி, கந்தர்மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகரட்ணம் கந்தசாமி அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை *(11.05.2025)* அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் - கண்மணி தம்பதியரின் இரண்டாவது புத்திரனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளியம்மை தம்பதியரின் மூத்த மருமகனும் காலஞ்சென்ற ஞனேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் வாமதேவன் (ஓய்வுபெற்ற தொழிநுட்பவியலாளர் கொழும்பு), இந்திரதேவன் (இத்தாலி), ஜெயதேவன் (சுவிஸ்), ஜெயந்தி, ரசந்தி (ஜேர்மனி), ஞானதேவன் (ஜேர்மனி), நித்தியானந்தம் (பிரான்ஸ்), சாமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சந்திராதேவி (கொழும்பு), ஜொனிற்றா (இத்தாலி), இராசமணி (சுவிஸ்), காலஞ்சென்ற இராஜேஸ்வரன் மற்றும் கலாமோகன் (ஜேர்மனி), தேவமனோகரி (ஜேர்மனி), தயாநிதி (பிரான்ஸ்), கோணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜனனி (செயற்திட்ட முகாமையாளர் - கொழும்பு), றொபேர்ட் (முகாமையாளர் - இத்தாலி), திருமதி ஜெயபாரதி சுயந் (தாதி - சுவிஸ்), சனார்த்தனன் (கணனி தொழில்நுட்பவியலாளர் - சுவிஸ்), ரமணன் (தொழிநுட்ப பரிசோதனையாளர் - ஜேர்மனி), கார்த்திக் (மின்பொறியியலாளர் - ஜேர்மனி), ரமணி (வங்கி அலுவலகர் - ஜேர்மனி), திரு. திருமதி தேனுஜன் - சுபத்திரா (கணக்காளர் - ஜேர்மனி), திருமதி தெனுசா வீரதினேஷ் (சட்ட உதவியாளர் - ஜேர்மனி), தேனுசன் (சிரேஷ்ட முகாமையாளர் - பிரான்ஸ்), விசாகி (பொறியியல் மாணவி - பிரான்ஸ்), நிலோஜன் (பிரான்ஸ்), வினோதன் (ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம், ஏற்றுமதி விவசாயம்), சாகிர்த்தியா (கொழும்பு மருத்துவபீடம்) ஆகியோரின் அன்புப் பேரனும் சாயின் (சுவிஸ்), வீராதிரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் காலஞ்சென்ற சிவராசா, கனகலிங்கம், தணிகாசலம், குமரகுரு மற்றும் புனிதவதி, சண்முகசுந்தரம், பாஸ்கரன், லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரி, கனகதாஸ் மற்றும் சண்முகதாஸ் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை *(15.05.2025)* வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 10 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் [illegible]கொள்ளவும்.

[illegible]
077 494 0541

(4183)

தகவல் :
குடும்பத்தினர்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த *18.04.2025* வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

## V.T சிவலிங்கம்

அவர்களின்

அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை **(16.05.2025)** காலை 6 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரை மண்டபத்தில் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை **(18.05.2025)** காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்வு **நாச்சிமார் கோவில் ஆலய மண்டபத்தில்** நடைபெற இருப்பதனால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

16/04 சீனியர் வீதி,
[illegible], யாழ்ப்பாணம்.

076 963 6390
077 664 6963

(C-2960)


இங்ஙனம் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை உலுக்கும் கோர விபத்துக்கள்! கட்டுப்படுத்த புதிய நடவடிக்கை!

**(கொழும்பு)**

**நாடு முழுவதும் அதிகரித்து வரும் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்த புதிய நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி 16 நிறுவனங்கள் கூட்டாக இணைந்து வீதி விபத்துகளைத் தடுப்பதற்கான செயற்திட்டம் ஒன்றை அடுத்த இரண்டு மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தவுள்ளது.**



கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று, நுவரெலியா - கம்பளை பிரதான வீதியில், வீதியைவிட்டு விலகி பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானதில் சுமார் 23 பயணிகள் உயிரிழந்துள்ளதுடன் 35 இற்கும் மேற்பட்டோர் படு காயமடைந்தனர்.

இந்த நிலையில், வீதி விபத்துகளைத் தடுப்பதற்கான திட்டங்கள் குறித்து ஊடகம் ஒன்றுக்குப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துணை அமைச்சர் பிரசன்ன குணசேன கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "மூன்று மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட வீதிப் பாதுகாப்பு என்ற முயற்சியின் ஒரு பகுதியாக ஒரு செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.


இது வீதி தொடர்பான இறப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு தொடங்கப்பட்டது.

வீதிப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பில் உள்ள அனைத்து முக்கிய பங்குதாரர்களும் இந்தத் திட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்படுகிறார்கள்.

இதில் வீதி பயணிகள் போக்குவரத்து ஆணையம், இலங்கை போக்குவரத்து சபை, ரயில்வே துறை, பொலிஸ், மோட்டார் போக்குவரத்துத் துறை, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் மற்றும் பல அடங்கும்.

அவர்கள் ஒரு செயற்றிட்டத்தைத் தயாரித்துள்ள நிலையில் அது அடுத்த இரண்டு மாதங்களுக்குள் செயற்படுத்தப்படும்" என அவர் தெரிவித்துள்ளார். (நி-8)

## இந்திய உயர்ஸ்தானிகரை சந்தித்த ஜீவன் தொண்டமான்



(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் சந்தித்து கலந்துரையாடினார்.

கொழும்பில் அமைந்துள்ள இந்திய இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற குறித்த இச்சந்திப்பின் போது பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றன. (நி-8)

## சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத பல தன்சல்கள் இடைநிறுத்தம்?

(கொழும்பு)

முறையான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றாத 8 தன்சல்களை (உணவு தானம்) இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, முறையான அறிவுறுத்தல்களுக்குப் பிறகு மேலும் 17 தன்சல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டதாக அதன் செயலாளர் சமில் முத்து குட தெரிவித்தார்.

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் நாடு முழுவதும் பல தன்சல்கள் ஏற்பாடு செய்யப்பட்டன,

மேலும் அனைத்து தன்சல்களும் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் மேற்பார்வையிடப்பட்டன. (நி-8)

## மின்சாரசபைத் தலைவர் பதவி விலகவில்லை

### அமைச்சு மறுப்பறிக்கை

(கொழும்பு)

மின்சார சபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாப்பிட்டிய தனது பதவியில் இருந்து விலகியுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மையில்லை என்று மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு இந்த மறுப்பறிக்கையை வெளியிட்டுள்ளது.

மின்சார சபையின் தலைவர் திலக் சியம்பலாப்பிட்டிய வெளிநாடு செல்வதற்காக குறுகிய காலத்திற்கான விடுமுறையொன்றை மட்டுமே பெற்றுக் கொண்டுள்ளார்.

குறித்த விடுமுறைக்கான அனுமதி கோரியே அவர் கடிதமொன்றைச் சமர்ப்பித்துள்ளார். மற்றும்படி அவர் தனது பதவியிலிருந்து விலகவில்லை.

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு அவர் மீண்டும் மின்சார சபையின் தலைவர் பதவியில் தொடர்வார் என்றும் குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டில் உப்புக்குத் தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டில் உள்ளூர் சந்தையில் உப்புக்குத் தட்டுப்பாடு நிலவுவது தொடர்பில் உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட உப்பு நாட்டை வந்தடைவதில் ஏற்பட்டுள்ள தாமதமே இவ்வாறு உப்புக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக உப்பு உற்பத்தியார்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

30 மெட்ரிக்தொன் உப்பை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருந்தாலும், அதனை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட தாமதத்தால் சந்தையில் உப்புக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் உப்புக்கு தட்டுப்பாடும் விலை உயர்வும் ஏற்பட்டுள்ளதாகவும் உப்பு உற்பத்தியார்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்துள்ளார்.




இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட உப்பு எதிர்வரும் வாரத்திற்குள் நாட்டை வந்தடையும் எனவும் அதன் பின்னர் உப்புக்கு தட்டுப்பாடு நிலவாதென்றும் அச்சங்கத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிலையில், சந்தையில் உப்புக்கான விலை கடுமையாக அதிகரித்துள்ளதாக நுகர்வோரும் வர்த்தகர்களும் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் சில பகுதிகளில் ஒரு கிலோகிராம் கட்டி உப்பு பையொன்றின் விலை 450 ரூபா முதல் 500 ரூபா வரையில் விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

உப்புக்கான விலை உயர்வு நுகர்வோர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ள நிலையில், பலர் இது தொடர்பில் சமூக ஊடகங்களில் தங்களின் அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், உப்பு விலை அதிகரிப்பு தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வட மாகாண பளுதூக்கல் போட்டி
## யாழ். மாவட்டம் சம்பியன்





வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான பளு தூக்கல் போட்டியில் யாழ் மாவட்ட அணியினர் சம்பியன் கிண் ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தினால் நடத்தப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான பளு தூக்கல் போட்டி யாழ். துரையப்பா உள்ளக விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில் யாழ் மாவட்டம் ஆண்கள் பிரிவில் 5 தங்கம், 6 வெள்ளி உட்பட 11 பதக்கங்களையும், பெண்கள் பிரிவில் 6 தங்கம், 5 வெள்ளி, 3 வெண்கலம் உட்பட 14 பதக்கங்களையும் கைப்பற்றி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். இரண்டாமிடத்தை முல்லைத்தீவு மாவட்டமும், மூன்றாமிடத்தை வவுனியா மாவட்டமும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

# வவுனியா நெற்போல் பிரிமியர் லீக் சம்பியனானது பாஸ்ப்ரோடக்ஸ்




வவுனியா நெற்போல் பிரிமியர் லீக் இறுதிப் போட்டியில் பாஸ்ப்ரோடக்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

வவுனியா மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய வவுனியா நெற்போல் பிரிமியர் லீக் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியானது நேற்று முன்தினம் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் பிவோட் பார்ட்டி அணி எதிர் பாஸ்ப்ரோடக்ஸ் அணி மோதின.

இதில் 42:37 என்ற புள்ளி அடிப்படையில் பாஸ்ப்ரோடக்ஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக இலங்கையின் தேசிய வலைப்பந்தாட்ட வீரர் திலினி டினெசிக்க கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களையும் கேடயங்களையும் வழங்கி வைத்தார்.

குறித்த சுற்றுப்போட்டியில் பவர் பாசர்ஸ், டினாமிக்7, வுளொக்கிங் றொக்கெற்ஸ், பிவோட் பாட்டி, பாஸ்ட் புரெக்டர்ஸ் ஆகிய அணிகள் பங்குபற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-250)

# மீண்டும் ஆரம்பமாகவுள்ள ஐ.பி.எல் அட்டவணை வெளியிட்ட பி.சி.சி.ஐ

இந்தியா - பாகிஸ்தான் தாக்குதல் நிறுத்தத்தைத் தொடர்ந்து பாதியில் நிறுத்தப்பட்ட ஐ.பி.எல் போட்டிகள் மீண்டும் தொடங்கும் திகதியை பி.சி.சி.ஐ அறிவித்துள்ளது. பி.சி.சி.ஐ வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, போட்டிகள் மீண்டும் எதிர்வரும் 17 ஆம் திகதி (சனிக்கிழமை) தொடங்கவுள்ளன. ஜூன் 3 ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ட்ரோன் தாக்குதலால் பாதியில் நிறுத்தப்பட்ட பஞ்சாப் மற்றும் டில்லி அணிகளுக்கு இடையிலான போட்டி மே 24 ஆம் திகதி ஜெய்ப்பூரில் நடைபெறவுள்ளது. நிறுத்தம் செய்யப்பட்ட ஓவர்களில் இருந்து இந்த மேட்ச் தொடங்கும் என கூறப்படுகிறது.

ப்ளே ஆஃப் சுற்றுகளையும் சேர்த்து மொத்தம் இன்னும் 17 போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இவை பெங்களூரு, ஜெய்ப்பூர், டில்லி, லக்னோ, டில்லி மற்றும் அகமதாபாத் ஆகிய 6 இடங்களில் மட்டுமே நடைபெறும். இதில் எதுவும் சேப்பாக்கத்தில் நடைபெறாது.

ப்ளே ஆஃப் சுற்று விபரங்கள்:

குவாலிபையர் 1 - மே 29, எலிமினேட்டர் - மே 30, குவாலிபையர் 2 - ஜூன் 1, இறுதிப் போட்டி - ஜூன் 3 ஆம் திகதி [illegible] நடக்க உள்ளது. (6-8)

# ரோகித், கோலி ஓய்வையடுத்து இந்திய அணியில் யாருக்கு வாய்ப்பு?

ஐ.பி.எல். போட்டி முடிந்த பிறகு இந்திய அணி இங்கிலாந்து சென்று 5 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. ஜூன் 20 ஆம் திகதி இந்த டெஸ்ட் தொடர் தொடங்கவுள்ளது.

ரோகித் சர்மா, விராட் கோலி ஆகியோர் டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு இந்தியா பங்கேற்கும் முதல் டெஸ்ட் தொடர் இதுவாகும். இத்தொடரில் யாருக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

இஷான்கிஷன், கருண் நாயர், ஆகாஷ்தீப், ஷர்துல் தாக்கூர் மற்றும் ஐ.பி.எல். போட்டியில் அபாரமாக விளையாடும் தமிழக வீரர் சாய் சுதர்ஷன், ஜெய்ஷ்வால் ஆகியோரும் இங்கிலாந்து டெஸ்ட் அணியில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அது தவிர விராட்கோலியின் நம்பர் 4 இடத்தில் கே.எல்.ராகுலும் சுப்மன் கில் கப்டனாகவும் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் இந்திய அணி வீரர்கள் விபரம்:-

சுப்மன்கில் (கப்டன்), சாய் சுதர்ஷன், ஜெய்ஷ்வால், கே.எல்.ராகுல், கருண் நாயர், ரிஷப் பண்ட், துருவ் ஜூரல், நிதிஷ்குமார் ரெட்டி, ஜடேஜா, அக்ஷர் படேல், வாஷிங்டன் சுந்தர், பும்ரா, முகமது சிராஜ், முகமது ஷமி, ஹர்சித் ராணா, ஆகாஷ்.தீப், ஷர்துல் தாக்கூர், குல்தீப் யாதவ். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விற்பனையில் கடும் வீழ்ச்சி



## வாகன விற்பனையாளர்கள் சங்கம் தகவல்

(கொழும்பு)

**அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட புதிய வாகனங்களின் விற்பனை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.**

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கு அரசாங்கம் அதிகளவான வரி விதித்துள்ளமை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக வாகன விற்பனையாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

செல்வந்தர்கள் பயன்படுத்தும் அதி சொகுசு வாகனங்கள் வழமை போன்று விற்பனையாகும் அதேநேரம் மத்திய தர வர்க்கத்தினர் பயன்படுத்தும் வாகனங்களின் விற்பனை பாரியளவில் சரிவைச் சந்தித்துள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதன் காரணமாக வாகன இறக்குமதி மூலமாக அரசாங்கம் எதிர்பார்த்த வரி வருமானம் கிடைக்காமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (நி-8)

# 19 ஆம் திகதி முதல்
## விசேட நுளம்பு ஒழிப்பு வாரம்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக எதிர்வரும் 19ஆம் திகதி முதல் விசேட நுளம்பு ஒழிப்பு வாரம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

நேற்று முன்தினம் வரை நாட்டில் 19,724 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதுடன், அவர்களில் அதிகமானவர்கள் மேல் மாகாணத்தில் இருந்தே பதிவாகியுள்ளதாக டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8)

# இலங்கைக்கு படையெடுக்கும் சுற்றுலா பயணிகள்

(கொழும்பு)

மே மாதத்தின் முதல் வாரத்தில் 33,910 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

சமீபத்திய புள்ளி விபரங்களின்படி, இந்த ஆண்டு இதுவரையிலான மொத்த வருகைகள் 930,794 ஆக உயர்ந்துள்ளன.

குளிர் காலத்திற்குப் பிறகு பொதுவாகக் காணப்படும் மேற்கத்திய நாடுகளிலிருந்து வருகையில் பருவகால சரிவு இருந்தபோதிலும், தினசரி சுற்றுலாப் பயணிகளின் வருகை சராசரி 5,000 ஆகவே உள்ளது. இருப்பினும், மே 2025 முதல் வாரத்திற்கான வருகைகள் முந்தைய ஆண்டுகளில் இதே காலகட்டத்தில் பதிவு செய்யப்பட்டதை விட அதிகமாக உள்ளன.

மத்திய வங்கியின் கூற்றுப்படி, ஏப்ரல் 2025 இல் சுற்றுலா வருவாய் மட்டும் 646.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 700 | 400 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 240 | 230 | 230 | 200 | 250 |
| பச்சைமிளகாய் | 160 | 150 | 200 | 150 | 250 |
| தக்காளி | 1200 | 1200 | 1200 | 750 | 1000 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 350 | 350 |
| கோவா | 550 | 500 | 600 | 350 | 600 |
| கரட் | 800 | 950 | 1200 | 900 | 1200 |
| பூசணி | 180 | 200 | 180 | 180 | 200 |
| புடோல் | 300 | 250 | 200 | 200 | 400 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 100-300 | 300 | 150-320 | 400 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 180 | 150 | 160 |
| பாகற்காய் | 1500 | 800 | 1000 | -- | 800 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 250 | 200 | 400 |
| பயற்றங்காய் | 600 | 400 | 600 | 200 | 400 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 210 | 400 |
| பீற்றூட் | 600 | 600 | 600 | 500 | 700 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 2500 | 3000 | 2000 | 2000 | 2000 |
| போஞ்சி | 800 | 850 | 1000 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 600 | 500 | 350 | -- | 500 |
| கீரை - 1 பிடி | 150 | 80-150 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 350-420 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 270 | 250 | 120-220 | 200-250 |
| இராசவள்ளி | 650 | 700 | 1000 | 450 | 700 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 600 | 700 | 800 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | -- | -- |

# இராசிபலன்

14.05.2025
சித்திரை 31 , புதன்கிழமை
துதியை பின்னிரவு 1.45 மணிவரை

அனுசம் முற்பகல் 11.24 மணிவரை
சுபநேரம்4.23-5.53 மணிவரை
இராகுகாலம் 11.53-1.23 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்
பரணி, கார்த்திகை

வள்ளவன்

**மேஷம்** வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.

**ரிஷபம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கடன் தொல்லைகள் தீரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்** கனவு பலிதமுண்டு, விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், வியாபார வளர்ச்சியுண்டு, ஆரோக்கியம் சீராகும், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.

**கடகம்** மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம் பெறலாம், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**துலாம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கூடும், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, உறவினர் பகை மாறும்.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, சுப விரயங்கள் மேலோங்கும் நாள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**மகரம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பலரது அன்பிற்கு பாத்திரமாவீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கும்பம்** வெளியூர் பயணங்கள் எண்ணியபடியே கைகூடும், என்றோ நடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு.

**மீனம்** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், மனக்குழப்பம் தீரும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியும் நெல்லும் நல்ல நிலத்தில் தான் விளையும்.

# எமது நாட்டின் பண்பாடு பாலியல் வன்கொடுமையா?

## வன்கொடுமைகளுக்கு எதிராக யாழில் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**பாலியல் வன்கொடுமைக்குள்ளாகி படுகொலை செய்யப்பட்ட வித்தியாவின் 10 ஆவது ஆண்டு நினைவு மற்றும் இலங்கையில் தொடரும் பாலியல் வன்கொடுமைகளை கண்டித்து யாழில் போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.**





வல்லமை சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ் பிரதான பேருந்து நிலையம் முன்பாக நேற்றுக் காலை இக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், பாலியல் தொல்லையற்ற வேலைத்தளங்களை உறுதிப்படுத்துவோம், அரசே அம்சிகாவிற்கு நீதியை பெற்றுக் கொடு, பணியிடங்களில் பாலியல் தொல்லைக்கு இடமில்லை. சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துங்கள். வாக்கு சேகரிப்புக்கு திரள்பவர்கள் சமூக நீதிக்கு ஒதுங்குவது ஏன்? எமது நாட்டின் பண்பாடா பாலியல் வன்கொடுமை? போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது இந்தக் கொடுமைகள் தொடர்வதைத் தடுக்க, சட்டமன்ற, நீதித்துறை மற்றும் நிர்வாகத் துறைகளில் உள்ள பொறுப்பான நபர்கள் உடனடி மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர். (6-8)

# தமிழ்கட்சிகள் கோரும் பட்சத்திலே ஆதரவளிக்க பரிசீலிக்கப்படும்-டக்ளஸ்



(யாழ்ப்பாணம்)

ஏனைய தமிழ் கட்சிகளுக்கான ஆதரவு அவர்கள் அதிகாரபூர்வமாக கோரும் பட்சத்தில் சூழ்நிலையை கருத்தில் கொண்டே எடுக்கப்படும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.


ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உள்ளூர் அதிகார சபையில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பிரதேச பொறுப்பாளர்கள், கட்சியின் முக்கியஸ்தோரை யாழில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தோல்வியிலும் வெற்றி என்ற நிலையில்தான் தற்போது நடைபெற்று முடிந்த உள்ளூர் அதிகார சபைத் தேர்தலின் பெறுபேறுகள் அமைந்துள்ளன.

நாம் வழமை போன்றே எமது நிலைப்பாடுகளை வெளிப்படையாக கூறி மக்களிடம் சென்றிருந்தோம். அதன் முடிவுகள் வந்துள்ளன. அவை எமக்கு சார்பாக இல்லாவிடினும் கிடைத்தவை தோல்வியிலும் வெற்றிக்கான சமிக்ஞையாகவே இருக்கின்றது.

அதேநேரம் ஆட்சியில் பங்கெடுக்கும் விருப்பம் எமக்கில்லை. மேலும் உள்ளூர் அதிகார சபைகளில் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவை நாம் வழங்கப்போவதில்லை. இதுவே கட்சியின் முடிவாகவும் இருக்கின்றது என தெரிவித்தார். (6-8-3)

## இரத்ததான முகாம்




(யாழ்ப்பாணம்)


'குருதியில் தோய்ந்த நம் தேசத்திற்காக ஒரு துளி குருதி' என்ற தொனிப் பொருளில் 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் சிங்கள பேரினவாத அரசாங்கத்தினால் இனப்படுகொலை செய்யப்பட்ட உறவுகளை நினைவேந்தி குருதிக் கொடை நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை யாழ்.பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் இடம்பெறவுள்ளதென யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர். (3-8)

# நினைவேந்தல் வாரத்தையொட்டி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல்


நெல்லியடியில்...


கிளிநொச்சியில்...


முல்லைத்தீவில்...




மன்னாரில்


வவுனியாவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளைத் தேடி அலைந்த பல கண்கள் இன்று மூடிவிட்டன

## இதற்கு சர்வதேசத்தின் பதில் என்ன? உறவுகள் கேள்வி

**(மன்னார்)**

**காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி கண்ணீர் சிந்திய எத்தனையோ கண்கள் இன்று மூடி விட்டன. இன்னும் எத்தனை கண்கள் மூடப் போகின்றதோ தெரியாது. இதற்கு சர்வதேசம் என்ன பதில் சொல்லப் போகின்றது? என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.**



மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று மதியம் மன்னார் பள்ளிமுனை பெருக்க மரத்தடிப் பகுதியில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தையொட்டி நினைவுக்கஞ்சி காய்ச்சி மக்களுக்கு வழங்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும் தெரிவிக்கையில், முள்ளிவாய்க்கால் மண்ணில் இரத்தமும், சதையும் சிந்தப் பட்டு அந்த நாளைக் கடந்த 16 வருடங்களாக ஒவ்வொரு தமிழ் உறவுகளும் நினைவு கூர்ந்து கஞ்சி காய்ச்சி வழங்கிக் கொண்டு இருக்கிறோம்.

இந்தக் கஞ்சி 16 வருடங்களுக்கு முன் ஒரு பிடி அரிசி கூட கிடைக்காமல், இருந்த அரிசியை வைத்து தண்ணீர் ஊற்றி உப்பும் இல்லாமல் அங்கிருந்த அமைப்புகள் குறித்த கஞ்சியை பொது மக்களுக்கு வழங்கி உள்ளனர்.

அதில் சிலருக்குத்தான் இந்தக் கஞ்சி கிடைத்தது. கஞ்சிக்காக வரிசையில் நின்ற எத்தனையோ உறவுகள் கஞ்சி கிடைக்காமல் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்தனர். இன்று அதை மறக்கவும் முடியாது. இந்தக் கஞ்சியை நாம் வழங்குவதற்கு காரணம் 16 வருட கால இடைவெளியில் நிறைய நிறைய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவை எல்லாம் எம் சமுதாயத்தின் இளைஞர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். அது தான் நாம் எம் இனத்திற்கு செய்கின்ற பரிகா ரம்.

அதைத் தான் இன்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளாகிய நாமும் நினைவு கூர்ந்து 16 வருடமாக அங்கே சென்று வந்து கஞ்சி காய்ச்சி நினைவு படுத்திக் கொண்டு வேதனைகளையும், சோதனைகளையும் தாங்கிக் கொண்டு ஒவ்வொரு உள்ளங்களும் இன்று வீதியில் நின்று போராடிக் கொண்டு, எம் உறவுகள் மீண்டும் எம்மிடம் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையில் நாங்கள் காவல் நிற்கின்றோம் என தெரி வித்தனர். (6-8-285)



யாழ்.கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடத்தில் நிறைமதி நாளையொட்டி நேற்று முன்தினம் நல்லை ஆதீன முதல்வரின் நினைவுப் பிரார்த்தனை, ஓய்வு பெற்ற வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவனுக்கு மதிப்பளித்தல், உயர்தரப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் முதல் இடம்பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு மற்றும் தென்னாடு சஞ்சிகையின் 57 ஆவது இதழ் வெளியீடும் இடம்பெற்றது. (படம்: சிவசாந்தன்)

# தொடரும் மண் அகழ்வு

## கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று வடக்கில் மக்கள் குடியிருப்புக்கள் பகுதியில் மண் கொள்ளையடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கின்றனர்.

முன்னர் மணல் திட்டியாக இருக்கும் பகுதிகளில் இருந்து மணல் எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் தற்போது கிராமப் பகுதியில் அதிகமாக கட்டடங்கள் அமைப்பதனால் மணல் அனுமதி கொடுக்கப்படாத நிலையில் மக்கள் குடியிருப்புகள் நடுவில் கள்ள மண் கடத்தல் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு கள்ள மண் அகழ்வு தொடர்ந்தால் இக் கிராமப் பகுதியில் பாரிய நீர்த்தேக்கம் ஏற்பட்டு மழைக்காலத்தில் உயிர் சேதங்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8)



கலைக்களம் பிரிவினரின் ஏற்பாட்டில் செல்வி.அகரயாழினியின் நடன நாட்டிய அரங்கேற்ற நிகழ்வு கடந்த மார்ச் மாதம் யாழ்.வள்ளுவர் பண்பாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.

## பொன்னாடை அணிவித்து கௌரவிப்பு



திருச்சியில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய பொன்விழா மாநாட்டு தலைவர்

**பேராசிரியர் முனைவர் சே.மு.மு.முகமதலி**

அவர்களுக்கு கலாபூஷணம் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். அருகில் மாநாட்டின் செயலாளரும் காணப்படுகிறார்.

(சி-2955)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அண்மையில் நடைபெற்ற
யாழ்.பல்கலைக்கழகத்தின்
39 ஆவது பட்டமளிப்பு விழாவில்
எமது பாடசாலை ஆசிரியர்

**திருமதி.**
**லக்சனா மதன்ராஜ்**

கலைமானி (B.A)
பட்டம் பெற்றமையை இட்டு பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

(4157)

வாழ்த்துவோர் :
நலன்புரிக்கழகம்
யா/ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம், புத்தூர்.


### ரயிலுடன் ஜீப் மோதி விபத்து-4 பேர் காயம்

(கொழும்பு)

அஹங்கம - கபலான பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பெலியத்தயிலிருந்து கண்டி நோக்கி பயணித்த ரயிலுடன் ஜீப் வாகனம் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்தவர்கள் அனைவரும் கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் அஹங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாரதம்

# முடிவுக்கு வரும் வர்த்தகப் போர்!

## வரியைக் குறைக்க அமெரிக்கா – சீனா இணக்கம்

**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவும் சீனாவும் ஒருவருக் கொருவர் இறக்குமதி செய்யும் பொருட்க ளுக்கு விதிக்கும் வரிகளை தற்காலிகமாகக் குறைக்க இணக்கம் தெரிவித்துள்ளன.**



இரு நாடுகளும் 90 நாட் களுக்கு பரஸ்பர கட்டணங் களை 115 சதவீதமாக குறைக்கும் என அமெரிக்க திறைசேரிச் செயலாளர் ஸ்கொட் பெசென்ட் தெரிவித் துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் சீனா மற்றும் அமெரிக்கா இடையே நடைபெற்ற வர்த் தகப் பேச்சுவார்த்தைக ளுக்குப் பின்னர் இந்த அறிவிப்பு வெளிவந்துள் ளது.

கடந்த ஜனவரி மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக் காவுக்கு இறக்குமதி செய்யப் படும் சீனப் பொருட்களுக்கு அதிக வரிகளை விதித்த பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்ற முதல் சந்திப்பு இதுவாகும்.

சீன இறக்குமதிகள் மீது ட்ரம்ப் 145 சதவீத வரி விதித் திருந்தார். அதேநேரத்தில் சில அமெரிக்கப் பொருட்க ளுக்கு 125 சதவீத வரியை சீனா விதித்தது.

இதனால், நிதிச் சந்தை களில் கொந்தளிப்பை ஏற் படுத்தின, மேலும் உலகளா விய மந்தநிலை குறித்த அச்சங்களையும் தூண்டின.

சீன இறக்குமதிகள் மீதான அமெரிக்க வரிகள் தற்போது 90 நாட்களுக்கு 30 சதவீதமாகவும், அதேவேளையில் அமெரிக்க இறக்குமதிகள் மீதான சீன வரிகள் 10 சதவீதம் ஆகவும் குறைக்கப்படவுள் ளன. (நி-8)

## பாடசாலை மீது கோரத் தாக்குதல்!

## மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 24 பேர் உயிரிழப்பு


(மியன்மார்)

மியன்மாரின் சகாயிங் பகுதியில் உள்ள ஓஹே தெய்ன் ட்வின் கிராமத்தில் உள்ள ஒரு பாடசாலை மீது நேற்று முன்தினம் காலை மியன்மார் இராணுவம் குண்டுவீசி நடத்திய வான் வழித் தாக்குதலில் 22 மாணவர்களும் 2 ஆசிரி யர்களும் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலில் 10இற் கும் மேற்பட்ட மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தப் பகுதி இராணுவ ஆட்சிக்கு எதிரான ஜனநாயக ஆதரவு கிளர்ச்சி இயக்கத்தின் கோட்டை யாகக் கருதப்படுகிறது. தாக்குதலுக்கு உள்ளான பாடசாலை ஜனநாயக ஆதரவு இயக்கத்தால் நடத்தப்படுகிறது. ஆனால் தாக்குதல் நடந்த நேரத்தில் அங்கு தீவிரமான சண் டைகள் எதுவும் நடை பெறவில்லை.

தாக்குதலைத் தொடர்ந்து, எதிர்க்கட்சியான தேசிய ஒற்றுமை அரசாங்கம் இந் தச் சம்பவத்தை கண்டித் துள்ளது.

மியன்மார் இராணுவ அரசு, இந்தத் தாக்குதலை மறுத்துள்ளதுடன், எதிர்க் கட்சிகள் தவறான தகவல் களைப் பரப்புவதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.



இருப்பினும், நேரில் கண்ட சாட்சிகளும் சுயாதீன ஊடக அறிக்கைகளும் தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ளன. (நி-8)



## பஞ்சாப்பில் உள்

## மோடி திடீர்



(டில்லி)


இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆதம்பூர் விமானப்படை முகாமிற்கு திடீர் விஜயமொன்றை மேற் கொண்டுள்ளார்.

ஆப்ரேஷன் சிந்தூர் குறித்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பின் பிரதமர் நரேந்திர மோடி நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை பஞ்சாப்பில் உள்ள ஆதம்பூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## 40 ஆண்டுகால ஆயுதப் போரைக் கைவிடும் குர்தீஸ் கிளர்ச்சியாளர்கள்



(அங்காரா)

துருக்கியின் அரசாங்கங்களுக்கு எதிராக, 40 ஆண்டு காலமாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த குர்தீஸ் கிளர்ச்சியாளர்கள், தமது ஆயுத போராட்டத்தை கைவிட்டு, அமைதி வழிக்குத் திரும்ப உள்ளதாக அறிவித்துள்ளனர்.

குர்தீஸ் தொழிலாளர் கட்சி அல்லது பி.கே.கே எனக் கூறிக் கொள்ளும் குர்தீஸ் கிளர்ச்சியாளர்கள், 1984இல் இருந்து ஆயுதப் போராட்ங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.


இந்த நிலையில், குர்தீஸ் கிளர்ச்சியாளர்கள் குழுவை பயங்கரவாத அமைப்பாகக் கருதி துருக்கி மற்றும் மேற்கத்தேய நாடுகள் தடைசெய்துள்ளன.

அந்தக் குழுவின் தலைவர் அப்துல்லா ஒக்லான், 1999இல் இருந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். எனினும் குர்தீஸ் கிளர்ச்சியாளர்கள் குழு தமது போராட்டத்தை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றன.

சிறையில் இருக்கும் அப்துல்லாவை, அண்மையில் துருக்கி அரசியல் தலைவர்கள் சந்தித்து, வன்முறையை கைவிடுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதைத் தொடர்ந்து போர் நிறுத்தத்தை குர்தீஸ் கிளர்ச்சியாளர்கள் அறிவித்தனர். இந்த நிலையிலேயே ஈராக்கில் நடந்த நிகழ்வு ஒன்றில், குர்தீஸ் தொழிலாளர் கட்சியினர், தமது ஆயுதப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு முடிவு செய்தனர்.

அத்துடன், அரசியலை முன்னெடுத்து, துருக்கியுடன் அமைதி வழியில் குர்தீஸ் இன மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கையும் எடுக்கப்படும் என்று குர்தீஸ் கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-8)



## அணு ஆயுதப்போர் ஏற்படுவதை தடுத்து நிறுத்தி விட்டேன்

### ட்ரம்ப் பெருமிதம்

(வோஷிங்டன்)

இந்தியா - பாகிஸ்தான் இடையே அணு ஆயுதப்போர் ஏற்படுவதை தடுத்து நிறுத்தி விட்டேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



பஹல்காமில் சுற்றுலாப் பயணிகளைப் பயங்கரவாதிகள் சுட்டுக்கொன்ற சம்பவத்தை தொடர்ந்து, பாகிஸ்தான் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது.பயங்கரவாதிகளின் முகாம்கள் மீது மட்டுமே இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தியது. ஆனால், பாகிஸ்தான் இராணுவம், இந்தியாவில் பொதுமக்கள் மீதும், இராணுவ நிலைகள் மீதும் தாக்குதல் நடத்த முயற்சிகளை மேற்கொண்டது.

இதற்கு இந்தியா கடும் பதிலடி கொடுத்தது. இந்நிலையில், அமெரிக்க அரசு தரப்பில் மேற்கொண்ட முயற்சியை தொடர்ந்து போர் நிறுத்தம் ஏற்பட்டது.


இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியதாவது, இந்த வாரத்தில், இந்தியா - பாகிஸ்தான் இடையிலான அணு ஆயுத மோதல் ஏற்பட இருந்ததை எனது நிர்வாகம் தடுத்து நிறுத்தியுள்ளது. இல்லை என்றால் அது மிகவும் மோசமான அணு ஆயுதப் போராக இருந்திருக்கும். பல லட்சம் பேர் கொல்லப்பட்டிருப்பார்கள்.

இதற்கான முயற்சிகளை மேற்கொண்ட அமெரிக்க துணை ஜனாதிபதி வேன்ஸ், வெளியுறவுத்துறை அமைச்சர், ரூபியோ ஆகியோருக்கு நன்றி கூற விரும்புகிறேன்.

நிலைமையின் தீவிரத்தை இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளின் தலைவர்கள் உணர்ந்து கொண்டனர். அவர்களுக்கு நாங்களும் உதவி செய்தோம். நாங்கள் உங்களுடன் நிறைய வர்த்தகம் செய்ய இருக்கிறோம், எனவே இந்தப் போரை நிறுத்திக்கொள்ளவும் என்று கூறினேன்.

நீங்கள் போரை நிறுத்தாவிட்டால் நான் உங்களுடன் வர்த்தகம் செய்ய மாட்டேன் என்று கூறினேன். இந்த நிலையில் வர்த்தகத்தை யாரும் பயன்படுத்தமாட்டார்கள். அப்படிக் கூறிய உடனே அவர்கள், போர் நிறுத்தம் செய்ய ஒப்புக்கொண்டார்கள். அது நிரந்தரமாக இருக்கும் என்று நம்புகிறேன் என ட்ரம்ப் தெரிவித்தார். (நி-8)

## ...ள்ள முகாமுக்கு ...ர் விஜயம்



விமானப்படை முகாமிற்குச் சென்று அங்குள்ள வீரர்களுடன் கலந்துரையாடினார்.

ஆதம்பூர் விமானப்படைத் தளத்தில் உள்ள இந்திய விமானப் படை வீரர்கள் பிரதமர் நரேந்திர மோடியிடம் தற்போதைய "ஆப்ரேஷன் சிந்தூர்" கள நிலைமை குறித்தும் விளக்கமளித்தனர். (நி-8)

## எல்லைப் பகுதிகளில் அமைதியான சூழ்நிலை

### உறுதி செய்தது இந்திய இராணுவம்

(டில்லி)


சர்வதேச எல்லையில் போர் நிறுத்த மீறல்கள் எதுவும் நடக்கவில்லை. எல்லைப் பகுதிகளில் அமைதியான சூழ்நிலை நிலவுகிறது என இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

பஹல்காம் சம்பவத்திற்கு பதிலடியாக, "ஆப்ரேஷன் சிந்தூர்" என்ற பெயரில், இந்தியப் பாதுகாப்புப் படையினர் பாகிஸ்தான் பயங்கரவாதிகளின் முகாம்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். இதற்கிடையே கடந்த 10ஆம் திகதி, இருதரப்பிலும் போர் நிறுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து, இரு நாடுகளின் டி.ஜி.எம்.ஓ. எனப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கான டைரக்டர் ஜெனரல்கள் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, இருதரப்பிலும் போர் நிறுத்த நடவடிக்கைகளை சுமூகமாகக் கடைப்பிடிப்பது குறித்து ஆலோசனை நடந்தது.

தற்போது ஜம்மு-காஷ்மீர் இயல்பு நிலைக்குத் திரும்பத் தொடங்கியுள்ளது. எல்லையோரப் பகுதிகளில் உள்ள பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மீண்டும் திறக்கப்படும் என்று அதிகாரிகள் அறிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு சர்வதேச எல்லையில் போர் நிறுத்த மீறல்கள் எதுவும் நடக்கவில்லை என்பதை இந்திய இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது. "எல்லைப் பகுதிகளில் அமைதியான சூழ்நிலை நிலவுகிறது. இருப்பினும், பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளனர்" என இந்தியப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக ஒலி எழுப்பிய மோ.சைக்கிள்கள் பறிமுதல்
## 16 இளைஞர்கள் கைது

(பண்டாரகம)

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களைப் பயன்படுத்தி பொருத்தப்பட்டதாக கூறப்படும் நான்கு அதியுயர் திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்கள் உட்பட 16 மோட்டார் சைக்கிள்களை பண்டாரகம பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த மோட்டார் சைக்கிள் சாரதிகள் இந்த மோட்டார் சைக்கிள்களை அதிக சத்தங்களை எழுப்பி ஓட்டிச் சென்றுள்ளனர்.

இதனால் வெசாக் நிகழ்வுகளில் பங்கேற்கச் சென்ற பொது மக்களும், வீதியில் சென்ற ஏனைய வாகன சாரதிகளும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். அதன்படி, சம்பந்தப்பட்ட 16 மோட்டார் சைக்கிள்களுடன் 16 இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொரலஸ்கமுவ, கெஸ்பேவ, பண்டாரகம, தொடங்கொட, களுத்துறை, ஹோமாகம மற்றும் இங்கிரிய உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்நிலையில் கைப்பற்றப்பட்ட நான்கு அதியுயர் திறன் கொண்ட மோட்டார் சைக்கிள்களின் பதிவுத் தகடுகளைச் சோதனை செய்த போது சந்தேகத்திற்குரியதாக இருப்பது ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும், பொலிஸார் பறிமுதல் செய்த ஏனைய அனைத்து மோட்டார் சைக்கிள்களிலும் சைலன்சர்கள் அகற்றப்பட்டுள்ளதோடு, வீதியில் வாகனத்தை ஓட்டும்போது பாதசாரிகளை அச்சுறுத்தும் விதத்தில் சத்தத்தை ஏற்படுத்தும் வகையில் ஏனைய பாகங்கள் இணைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும், இளைஞர்களைப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறிய பொலிஸார், எதிர்வரும் நாட்களில் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்தனர். (நி-8)


# கல்யாணமாலை
## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>7இல் செவ்<br>கி.பா- 28<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc, PHD<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/15448 | பிறப்பு: 1998-RC<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Bsc<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15491 |
| பிறப்பு: 1996-இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>7இல் சூரி செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்-BA<br>எதிர்பார்ப்பு: Degree<br>தொ.இ: B/15449 | பிறப்பு: 1993-இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'3"<br>கி-பா-22<br>தகைமை/தொழில்: MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: வைத்தியர்,பொறியியலாளர்<br>தொ.இ: G/15493 |
| பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>1இல் செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Software Engineer<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15450 | பிறப்பு: 1999-இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா-16<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: வைத்தியர்,பொறியியலாளர்<br>தொ.இ: G/15498 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>12இல் செவ்<br>உயரம்: 6"<br>தகைமை/தொழில்: France<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்(வெளிநாடு)<br>தொ.இ: B/15451 | பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா-24<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில் - NCT Civil Engineer, DO<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், வெளிநாடு<br>தொ.இ: G/10704 |
| பிறப்பு: 1996-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>12இல் செவ்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: BSc, Bank<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/15455 | பிறப்பு: 1988-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா-50<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில் - BFA, DO<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்,<br>தொ.இ: G/10738 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 372



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## நம்பிக்கை

ஒரு தடவை நாரதர் சென்றுகொண்டிருந்தார். ஒரு வழியிலே தெரு வழியாக ஒருவர் வேத சாஸ்திரம் எல்லாம் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவர் நாரதரைப் பார்த்து, "எங்கே சென்று கொண்டிருக்கிறீர்கள்?"என்று கேட்டார். "கடவுளைப்பார்த்துவிட்டு வரலாம்என்று சென்று கொண்டிருக்கிறேன்!" என்றார் நாரதர். "அப்படி என்றால் அவரிடம், எனக்கு எப்போது முக்தி கிடைக்கும் என்று கேட்டுக் கொண்டு வாருங்கள்!"என்றார் இவர். "சரி கேட்டுக்கொண்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு நாரதர் நடந்தார். கொஞ்சத் தூரத்துலே ஒரு மரத்தடியிலே ஒரு தொழிலாளி செருப்பு தைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அந்த ஆளும் அதே மாதிரி கேட்டுக்கொண்டார். "எனக்கு எப்போது முக்தி கிடைக்கும் என்று கடவுளிடம் கேட்டுக்கொண்டு வாருங்கள்!" என்றார். அவரிடமும் சரி என்று சொல்லிவிட்டு நாரதர் நேராக வைகுண்டத்திற்கு வந்து சேர்ந்தார். கடவுளைப் பார்த்தார். இவர்கள் இரண்டு பேரும் சொல்லி அனுப்பிய விடயத்தைப் பற்றிக் கேட்டார். அதற்கு கடவுள் சொன்னார்.

"அந்த செருப்புத் தைக்கும் தொழிலாளி உடல் நீத்ததும் உடனே என்னை வந்தடைவான் ஆனால் அந்த சாஸ்திரம் படித்த ஆள் இப்போதைக்கு என்னிடம் வந்து சேரமாட்டான். அவன் இன்னமும் பல பிறவிகள் எடுத்து அங்கேயே இருக்க வேண்டியிருக்கிறது. எப்போது இங்கே வந்து சேருவான் என்று எனக்கே தெரியாது!" என்றார். நாரதருக்கு இதனுடைய இரகசியம் என்ன என்பது புரியவில்லை.

"எனக்கு ஒன்றும் புரியலையே! என்றார் கடவுளிடம் "சீக்கிரம் புரிந்து கொள்ளுவாய். நீ திரும்பிப் போகும்போது நான் இங்கே வைகுண்டத்தில என்ன செய்து கொண்டிருப்பது என்று கேட்டார். ஒரு ஊசியின் துவாரத்திலே ஒரு யானையைக் கோர்த்துக் கொண்டிருக்கிறேன என்று அவர்களிடம் சொல்லு! என்றார் கடவுள் சிரித்துக்கொண்டே. நாரதர் பூமிக்குத் திரும்பினார். "கடவுளைப் பார்த்தீர்களா, எப்படியிருக்கிறார்" என்று விசாரித்தார் வேத சாஸ்திரம் படித்தவர். பகவானா அவர் யானையை ஊசியின் காதிலே நுழைத்துக் கொண்டிருந்தார். பார்த்தேன்!" என்றார் நாரதர். ஊசியின் காதிலே யானையா? அது எப்படி முடியும் நீங்கள் சொல்வதை நான் நம்பமாட்டேன்" என்றார்.

இந்த ஆளுக்கு இறைவன் பெயரிலே நம்பிக்கை இல்லை என்பதை நாரதர் புரிந்து கொண்டார். அடுத்தபடியாக அந்தத்தொழிலாளி இருந்த இடத்துக்குச் சென்றார். "இறைவனைப் பார்த்தீர்களா?"என்று கேட்டார் அவர். பார்த்தேன். ஒரு ஊசித் துவாரத்திலே யானையைக் கோர்த்துக் கொண்டிருந்தார்!" என்று சொல்லிவிட்டு நாரதர் அந்த ஆள் முகத்தை கவனித்தார். அந்தத் தொழிலாளி இதைக் கேட்டுவிட்டுக் கொஞ்சம் கூட ஆச்சரியப்பட வில்லை!" அவராலே முடியாத காரியம் கூட உண்டா?"என்றார். "என்ன இப்படி சொல்கிறீர்கள்?" ஊசியின் துவாரத்திலே யானையைக் கோர்க்க முடியும் என்பதை நீங்கள் நம்புகிறீர்களா?" என்று கேட்டார் நாரதர்.

"நிச்சயமாக நம்புகிறேன்!"என்றார் அவர். "அது எப்படி?" என்று கேட்டார் இவர். "இதோ பாருங்கள் நான் இந்த ஆலமரத்தடியிலேதான் தினமும் உட்கார்த்திருக்கிறேன் தினமும் இந்த மரத்திலே இருந்து எவ்வளவு பழம் கீழே விழுகிறது? இந்தப் பழத்திலே இருக்கிற ஒவ்வொரு விதையிலேயும் உள்ளே, ஒரு ஆலமரம் .ஒரு சின்ன விதைக்குள்ளே ஒரு பெரிய ஆலமரம் இருக்க முடியும் போது சிறிய ஊசித் துவாரத்திலே கடவுள், யானையை நுழைய வைப்பதை ஒத்துக்கொள்வதில் என்ன கஷ்டம்இருக்கிறது" என்று சர்வ சாதாரணமாகப் பதில் சொன்னார் அந்தத் தொழிலாளி. நாரதர் யோசித்தார்.

இந்தத் தொழிலாளி வேத சாஸ்திரங்களையெல்லாம் படிக்கா விட்டாலும் கூட அறிவு பூர்வமாக சிந்தித்து இறைவனை நம்புகிறார் அதனாலேதான் கடவுள் இந்த ஆளுக்கு சீக்கிரம் முத்தி கிடைக்கும் என்று சொன்னார் என்பதைப் புரிந்துகொண்டார். இந்தக்கதையிலே வரும் கடவுள், நாரதர் - வைகுண்டம் எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும்.

ஒரு சின்ன விதைக்குள்ளே ஒரு பெரிய ஆலமரம் தூங்கிக்கிக்கொண்டிருப்பது உண்மை. அந்தரத்திலே ஆயிரம் கிரகங்கள் சுத்திக்கொண்டிருக்கிறது. உண்மை. இந்த உண்மைகள் அதிசயமாக நமக்குத் தெரிவதாலே அதை நம்பாமல் இருந்துவிட முடியாது.

இயற்கையை பரிபூரணமாக நம்புங்கள். அந்த நம்பிக்கையே நம் வாழ்வுக்கு ஆதாரம் என்பதை விளக்குவதற்காகத்தான் இந்தக் கதை. இந்தக் காலத்திலே நம் பிள்ளைகளுக்கெல்லாம் இதுமாதிரி நம்பிக்கை அதிகமாகவே இருக்கிறது! ஒருநாள் ஒரு சின்னப் பையனிடம் கேட்டேன்.

"ஏம்ப்பா கடவுள் ஒரு பானைக்குள்ளே ஒரு யானையை நுழைய வைத்துவிட்டார் என்று சொன்னால் அதை நீ நம்புவியா?"என்று கேட்டேன். "நம்புவேன் சேர் அதிசயமில்லை!"என்றான். "எப்படி?"என்று கேட்டேன். "அந்தப் பானை அந்த யானையைவிட பெரிதாக இருந்திருக்கும். அவ்வளவுதான்!" என்றான் சேர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத்து மண்ணை வளமாக்கும் உயிர்க்கரி!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

தாவரங்களை வளர்ப்பதற்கு மண் உகந்ததாக இருப்பது அவசியமானது. அதிலும் மண்ணிலுள்ள காபன் சத்து தேவையானளவுக்கு இருத்தல் அவசியம். மண்ணிலுள்ள காபன் சத்தை அதிகரிப்பதற்காக சேதனப் பசளைகள் மற்றும் இடுபொருட்களை அதனுள் இட்டு கலக்கின்றோம். பசுந்தாள் மற்றும் பசுந்தாள் இலைப் பசளைகளை மண்ணில் இடுவதற்கான காரணம் இதுதான். மாறாக மண்ணில் காபன் சத்து மிகவும் குறைவானதாக இருந்தால் அது தாவரத்தின் வேர்களுக்கு உகந்த சூழலைக் கொடுக்காததுடன் மண்ணிலுள்ள அங்கிகளின் அளவிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவிடும்.

அநேகமான நுண்ணங்கிகள் இறந்த சேதனப் பொருட்களில் அதிலுள்ள காபனைப் பிரிந்தழித்து தமக்குரிய சக்தியைப் பெற்றுக் கொள்ளும். பிரிந்தழிந்த சேதனப் பொருட்களில் காபன் சத்து தாவரத்திற்கும் செறிவடைந்து விடும். சேதனக்கழிவுகள் உக்குவதால் வரும் காபன்சத்து இலகுவாக தாவரங்களால் அகத்துறிஞ்சப்பட்டு அவற்றின் வளர்ச்சிக்கு உதவும். இந்தவகையில் மண்ணினுள் காபன்சத்து அல்லது சேதனப் பொருட்கள் தட்டுப்பாடானால் அது சிறந்த மண்ணாகத் தாவரங்களுக்கு கைகொடுக்காது. ஆகவே மண்ணில் ஏனைய சத்துக்களுடன் காபன் சத்தும் மிகமிக அவசியம் என்பதனை உணர்ந்து கொள்ளுங்கள்.

உயிர்க்கரி (Biochar) என்பது அதிகமான காற்று துளையுள்ள, கரியின் இன்னொரு வடிவமாகும். இதனை தாவர கழிவுகளிலிருந்து இலகுவாகப் பெறமுடியும். விலங்குகளின் சிறுநீர் கலக்கப்பட்ட உயிர்க்கரி நைதரசனை இலகுவாகப் பிடித்து வைத்திருப்பதனால் அதனையும் உற்பத்திக்கு பயன்படுத்தலாம். தமிழ் நாட்டில் மாடுகளின் சாணத்தைக் குழைத்து சுவர்களில் அடிப்பதனால் அது காய வரட்டி என பெயரிட்டு சேமித்து வைத்து விறகாக பயன்படுத்தப்படுகின்றது. தற்போது இந்த வரட்டியில் சத்துள்ள சேதனப்பதார்த்தங்கள் கலப்பதனால் இன்னும் ஊட்டச் சத்துள்ளதாக ஆகிவிடும். இவ்வாறான கலவில் தாவரங்களின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழும்.

உயிர்க்கரியை மண்ணில் இடுவதனால் மண்ணின் ஊட்டச் சத்தின் அளவை அதிகரிக்கின்றது. தாவரங்கள் ஊட்டச்சத்துக்களை உறுஞ்சுவதற்கு இலகுவாக்கின்றது. மண்ணின் உயிர்த் தன்மையை அதிகரிக்கின்றது. காபனை அகத்துறுஞ்சுவதற்கு ஏதுவாகின்றது. மண்ணிலுள்ள தீமைதரும் நுண்ணங்கிகளை கட்டுப்படுத்துகின்றது. மண்ணில் உள்ள சேதன மற்றும் அமில தொற்றுக்களை சமனிலைப்படுத்துகின்றது. மண்ணின் சத்துக்களை அதிகரிக்கின்றது. நைதரசனின் அகத்துறிஞ்சலை அதிகரிக்கின்றது. மிக முக்கியமாக மண்ணின் சுகாதாரத் தன்மையை பேணுவதற்கும் நன்மைதரும் நுண்ணங்கிகளுக்கான காப்பகமாகவும் உயிர்க்கரி பயன்படுகின்றது. இதன் மூலம் விளைச்சல் அதிகரிப்பதற்கும் தரமான பழங்கள் மற்றும் காய்கள் கிடைப்பதற்கும் ஏதுவாக அமைகின்றது. குறிப்பாக காலநிலை மாற்றத்தால் மண்ணில் ஏற்படும் பாதகமான விளைவுகளிலிருந்து காப்பதற்கும் உயிர்க்கரி உதவுகின்றது என ஆய்வின் மூலம் கண்டுபிடித்துள்ளனர். எமது சேதனக் கழிவுகளிலிருந்து உயிர்க்கரியை பெறமுடியுமென்பதனால் மண்ணுக்கு இடப்படும் காபனை வெளியிலிருந்து தருவிக்க தேவையில்லை. தாவரக் கழிவுகள், உமி, தண்டுகள், மற்றும் விலங்குணவில் விடப்பட்ட தாவர கழிவுகளிருந்து தயாரிக்கலாம்.

உலகிலுள்ள தற்போதைய காபன் மற்றும் நைதரசன் வட்டங்களை சமனிலையில் வைத்திருப்பதற்கு

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



உயிர்க்கரிகள் அவசியமானதாகும். மேலும் எமது சூழல் தொகுதிக்கு சவாலாகவும் காணப்படும் உயிர் திண்மங்களை எரிப்பதன் மூலம் உயிர்க்கரியை உருவாக்கி அதனை இடுவதனால் ஊட்டச்சத்துக்கள் கரைந்தோடுவதைத் தடுப்பதற்கும், பாலைவனமாதல் நிகழ்வுக்கும் உயிர்ப்பல்வகைமை குறைவதற்கும் சவாலாக உயிர்க்கரி கைகொடுக்கின்றதென்றால் பாருங்களேன். இவற்றைத் தடுப்பதற்குரிய வழிகளாக சேதனப் பொருட்களின் உயிர்க்காபன் மற்றும் நைதரசன் என்பன பயன்படுகின்றன.

குறிப்பாக உயிர்க்கரியின் மூலம் காலநிலை மாற்றத்தினாலேற்படும் பாதிப்புகளைத் தவிர்க்க முடியும். உயிர்த்திணிவுகளில் காணப்படும் காபனை ஒரு சமநிலையில் பேணுவதற்கும் அவ்வாறான உயிர்த் திணிவுகளில் காணப்படும் ஆவியாகக்கூடிய ஊட்டச்சத்துக்களை பிடித்து வைத்திருப்பதனால் அவற்றை மீள்சுழற்சிக்குட்படுத்தி விவசாயத் தேவைகளுக்கு பயன்படுத்த முடியும். மண்ணின் நீண்ட காலத்துக்கான தரத்தை உயர்த்துவதற்கு அவசியம் உயிர்க்கரி பயன்படுத்தப்படல் வேண்டும். உயிர்க்கரியில் அதிகளவு தாவர ஊட்டச்சத்துக்களும் குறிப்பாக நைதரசன், பொசுபரசு மற்றும் பொட்டாசியம் என்பனவற்றுடன் விவசாயத்திற்கு பயன்படுத்தப்படும் கல்சியம் காபனேற்று, ஒரு சதவீதத்திற்கு குறைந்த விவசாய கல்சியம் என்பனவும் கிடைக்கும். இதில் விசேட அம்சமென்னவெனில் உயிர்க்கரியைத் தொடர்ந்து பயன்படுத்தினால் பயன்படுத்தப்படும் அசேதன விவசாய உள்ளீடுகளை குறைப்பதற்கான சாத்தியமுண்டு என்பதனால் சூழல் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியமான செயற்பாடாகும்.

உயிர்க்கரியின் பிரயோகத்தால் மண்ணின் சுகாதாரம் நீண்ட காலத்திற்கு அதிகரிக்கும், அத்துடன் மண்ணிற்கு இடப்படும் உயிர்ப் பசளைகள் மற்றும் உயிர்ப்பு நுண்ணங்கிகளினது பயன்பாடு அதிகரிப்பதனால் தாவரங்களில் விளைச்சலும் அதிகரிக்கும். சேதனக் கழிவுகளை அமுக்கத்தில் ஒட்சிசன் அற்ற நிலையில் பாதி எரித்து வரும் மீதியையே உயிர்க்கரி குறிக்கும். இதனை குறைந்தளவில் ஒவ்வொரு வீடுகளிலும் பெறப்படும் சேதனக்கழிவுகளிலிருந்து உருவாக்கிக் கொள்ளலாம். மண்ணினுள் குழிதோண்டி அதனுள் விறகுகள், தாவரக் கழிவுகள் என்பனவற்றை இட்டு எரியூட்டி மேற்பக்கத்தை மூடுவதன் மூலம் ஒட்சிசனின்றிய எரித்தல் மூலம் உயிர்க்கரியை பெறமுடியும். வர்த்தக நோக்கத்தையுடையவர்களுக்கு பெரிய உயிர்க்கரி உருவாக்கம் விலை அதிகமுள்ள பாரிய இயந்திரங்களை பயன்படுத்தி அதனை தன்னிச்சையான பொறிமுறையுடன் கட்டுப்படுத்தினால் அதிகளவில் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்கள் உண்டு.

பயன்படுத்தப்படும் சேதனக் கழிவுகள் மற்றும் பதார்த்தங்களைப் பொறுத்து உயிர்க்கரியின் தன்மை மற்றும் தரம் மாறுபடும். உயிர்க்கரியின் மேற்பரப்பு ஒரு கிராமுக்கு 400 சதுர மீற்றர்கள் ஆகவும் இது தனது பாரத்தைவிட நீரில் 10 மடங்கு பாரத்தில் அதிகரித்து காணப்படும். திரவ சேதன ஊட்டச் சத்துக்களை குறிப்பாக விலங்கு கழிவுகள் மற்றும் சிறுநீர் என்பனவற்றை சேர்ப்பதன் மூலம் மண்ணின் அகத்துறுஞ்சும் தன்மையை பலமடங்கு அதிகரித்துக் கொள்ளலாம். உயிர்க்கரியை மாட்டு சலத்துடன் மற்றும் சாணத்துடன் கலந்து பின்னர் மண்ணினுள் இடலாம். இங்கே உயிர்க்கரியிலுள்ள உள்ளக நுண்துளைகள் அதிகரிப்பதனால் அதனது மேற்பரப்பின் அளவு விசாலமாக்கப்படுகின்றது. இவ்வாறு விரிவடைந்த மேற்பரப்பு சூழப்பட்டு சேதன ஊட்டச்சத்துக்கள் கூட்டாக அந்த நுண்துளைகளில் உள்ளகப் படுத்தப்பட்டிருக்கும். இதன் மூலம் உயிர்க்கரியில் கரையக்கூடிய ஊட்டச் சத்துக்களுடன் பசளைகளின் பயன்பாட்டின் வினைத்திறனையும் மண்ணிலிருந்து வெளியேறும் பசளைக் கழிவுகள் என்பனவற்றை கட்டுப்படுத்தவும் உதவும்.

மாட்டு சலத்தில் நைதரசன் பொசுபரசு, பொட்டாசு ஊட்டச்சத்துக்கள் இருக்கின்றன. இவை உயிர்க்கரியின் பெறுமதியை அதிகரிக்கின்றன. இதன் மூலம் ஒரு கியூபிக் மீற்றருக்கு 10கிலோகிராம் நைதரசன் மற்றும் 10 கிலோகிராம் பொட்டாசியம் பெறலாம். ஆயின் இரு பசுக்கள் வைத்திருக்கும் விவசாயி ஒருவருக்கு வருடத்தில் 7-10 கியூபிக் மீற்றர் சேதன உயிர்க்கரி பசளை கிடைக்கும். இதன் மூலம் தனது விவசாயத்தை மேம்பட்ட நிலையில் செய்வதற்கு முடியும்.

சிறந்த வினைத்திறனான தொழில் நுட்பத்தின் மூலம் மிகவும் தரமான உயிர்க்கரியை பெறுவதும் வெளியேறும் வாயுக்களின் அளவை கட்டுப்படுத்தவும் இதனை எரிப்பதற்கான ஆரம்ப எரிபொருளின் அவசியமின்றியும் விரைந்த பைரோலைசிசு நேரத்தையும் கொண்டிருக்கும். இதற்கான எரிக்கும் சூளை விலையதிக மற்றதும் நடை முறைச் சாத்தியமானதும் அதிகளவிலான ஆரம்ப செலவைக் கொண்டிராததுடன் அதிகளவிலான தொழிலாளர்களின் தேவையையும் குறைத்துவிடும். ஆதலினால் இந்த எளிய தொழில்நுட்பம் சிறு விவசாயிகளுக்கும் ஏற்புடையதானதாகவும் இதனைப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணினை வளமானதாக பேணவும் அதிகரித்த விளைச்சலை பெறவும் முடியும். விஞ்ஞான ரீதியில் இந்தப் பயன்பாட்டை உறுதி செய்தமையினால் எமது பிரதேசத்திலும் பயன்படுத்திக் கெள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 771





அவர் ஏதோ காரணத்தினால் மணம் புரிந்து கொள்ள மறுத்து வருகிறார் என்பதையும் அறிந்திருந்தார்கள். அப்படிப்பட்டவரை மணந்து கொள்வது என்றால், அது கனவிலும் கருத முடியாத பாக்கியம் அல்லவா? இந்தப் பரந்த பாரத கண்டம் முழுவதிலும் எத்தனை ராஜகுலப் பெண்கள் அந்தப் பேறு பெறுவதற்காகத் தவம் கிடக்கிறார்கள். இதையெல்லாம் எண்ணி மணிமேகலை ஒருவாறு உற்சாகம் கொண்டாள்.

காஞ்சியிலிருந்து ஆதித்த கரிகாலரும், தஞ்சாவூரிலிருந்து பெரிய பழுவேட்டரையரும் கடம்பூர் மாளிகைக்கு விருந்தாளிகளாக வரப்போகும் செய்தி அவளுக்கு மீண்டும் பழைய மாதிரி குதூகலத்தை அளித்தது. இந்தத் தடவை பழுவேட்டரையர் தம் இளையராணியையும் அழைத்து வருகிறார். நந்தினிதேவி தன் தமையன் உயிரைக் காப்பாற்றியவள். அவளுடைய அழகையும் குணத்தையும் அறிவாற்றலையும் பற்றி மணிமேகலை கந்தமாறனிடமிருந்து அதிகமாக கேள்விப்பட்டிருந்தாள். இந்தப் புதிய திருமணப் பேச்சுக்குக் காரணமானவளே பழுவூர் இளையராணி தான் என்றும் கந்தமாறன் சொல்லியிருந்தான். அவள் கடம்பூர் அரண்மனையில் இருக்கும் போது அவளைத் தக்கபடி உபசரிப்பதில் மணிமேகலை முன்னால் நிற்க வேண்டும் என்றும் சொல்லியிருந்தான். மணிமேகலையின் உள்ளமும் அதற்குத் தக்க பரிபக்குவம் அடைந்திருந்தது. பழுவூர் ராணியிடம் நல்லபடியாக சிநேகம் செய்து கொண்டு அவளுடைய பழக்கத்தினால் தஞ்சாவூர் அரண்மனைப் பெண்களை நாகரிகத்தில் தோற்கடிக்கக் கூடியவளாகத் தான் ஆகிவிட வேண்டும் என்று ஆசைப்பட்டாள்.

ஆதலின் ஒருவாரகாலமாக மணிமேகலை ஒரே உற்சாகத்தில் மூழ்கியிருந்ததுடன், பரபரப்புடன் அரண்மனையில் அங்குமிங்கும் ஓடி விருந்தாளிகளுக்கு வேண்டிய வசதிகளை மேற்பார்வை செய்வதில் ஈடுபட்டிருந்தாள். முக்கியமாகப் பழுவூர் இளையராணிக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த அரண்மனைப் பகுதியில் சகல வசதிகளும் ஏற்படுத்தி வைப்பதில் அவள் கவனம் செலுத்தினாள். தமையன் வேறு சொல்லியிருந்தான் அல்லவா? ஆகையால் அரண்மனைப் பணியாளர்களை வறுத்து எடுத்து விட்டாள். அவளுடைய தோழிகளையும் வதைத்து விட்டாள். பழுவூர் ராணி தங்கப் போகும் அறையில் ஒவ்வொரு பொருளையும் முப்பது தடவை பெயர்த்து எடுத்து வெவ்வேறு இடத்தில் வைக்கும்படி வற்புறுத்தினாள்.

இளவரசர் ஆதித்த கரிகாலர் தம்முடைய சிநேகிதர்களுடன் தங்கப் போகும் அறைகளையும் அடிக்கடிப் போய்ப் பார்த்து வந்தாள். யாரோ பார்த்திபேந்திரன் என்பவன் அவருடன் வரப் போகிறானாம். அவன் எப்படிப்பட்டவனோ, என்னமோ? இந்தக் காலத்தில் யார் எவ்விதம் மாறுவார்கள் என்று யார் கண்டது? தன் தமையனுடைய சிநேகிதனாயிருந்த வந்தியத்தேவன் ஆதித்த கரிகாலரின் பரிவாரத்தைச் சேர்ந்தவன்தான்! அவன் மட்டும் இத்தகைய சிநேகத் துரோகியாக மாறாதிருந்தால், இப்போது அவனும் வந்து கலந்து கொள்வான் அல்லவா? ஆம்! எவ்வளவு தான் மணிமேகலை வேறு பரபரப்பான காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும், அந்தச் சிநேகத் துரோகியை அடியோடு மறக்க முடியவில்லை!

பழுவூர் ராணி அன்று இரவே அநேகமாக வந்து விடுவாள் என்று சொன்னார்கள்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## காவல்க்காரன்



பஞ்சமி நாட்டின் மன்னர் பஞ்சோபகேசன். இவர் புதிதாக அமைத்த அழகிய தென்னந் தோப்பைக் காவல் காக்கப் பொறுப்பான ஆள் தேவை.

அந்த வேலையை யாரிடம் ஒப்படைக்கலாம் என யோசனை செய்தார். அப்போது அவனுக்கு, விவேகன் நினைவு வந்தது.

அரசவை கோமாளியான அவன் அங்கும், இங்கும் சுற்றி வருகிறான். எந்த வேலையும் செய்வது இல்லை. அவனுக்கு இந்த வேலையை கொடுப்பது என்று முடிவு செய்தார்.

"அந்த நிலத்தில் தென்னங்கன்றுகள் நடப் போகிறோம். இவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு உன்னுடையது. இந்தக் கன்றுகளை இரவிலும், பகலிலும் நன்றாக பார்த்துக் கொள்ள வேண்டும். கவனமாக நடந்து கொள்" என்றார்.

"அரசே! நீங்கள் சொன்னது போலவே நடந்து கொள்வேன்," என்றான் விவேகன் அங்கே தென்னங்கன்றுகள் நடப்பட்டன. அவற்றிற்கு காவல் இருக்கத் தொடங்கினான் விவேகன்.

பகல் வேளையில், அவற்றைப் பார்த்துக் கொள்வது அவனுக்கு எரிச்சலாக இருந்தது. இரவு வந்தது. வீடு செல்ல வேண்டும்.

தென்னங்கன்றுகளையும் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ன செய்வது என்று சிந்தித்தான். நல்ல வழி ஒன்று அவனுக்குத் தோன்றியது.

தென்னங்கன்றுகளை எல்லாம் பிடுங்கி, ஒன்றாகக் கட்டினான். அவற்றைத் தூக்கிக் கொண்டு, தன் வீட்டிற்கு வந்தான். தன் கண் பார்வையிலேயே அவற்றை வைத்திருந்தான்.

பொழுது விடிந்தது. அந்தக் கன்றுகளைத் தூக்கிக் கொண்டு நிலத்திற்கு வந்தான் முன்பு இருந்தது போலவே அவற்றை நட்டு வைத்தான். பொழுது சாய்ந்ததும் அவற்றைப் பிடுங்கி எடுத்துக் கொண்டு, தன் வீட்டிற்குச் சென்றான்.

இப்படியே தொடர்ந்து நடந்து வந்தது. ஒரு வாரம் சென்றது தென்னங்கன்றுகள் எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காக அரசர் அங்கு வந்தார்.

தென்னங்கன்றுகள் அனைத்தும் வாடிக் கிடப்பதைப் பார்த்தார். கோபம் கொண்ட அவர், "நீ பொறுப்பாகத் தென்னந்தோப்பைக் காவல் காப்பாய் என்று உன் பொறுப்பில் விட்டேன். எல்லாக் கன்றுகளும் வாடிக் கிடக்கின்றன. என்ன செய்தாய்?" என்று கத்தினார்.

"அரசே! நீங்கள் தான் இவற்றைப் பகலிலும், இரவிலும் நான் காவல் காக்க வேண்டும் என்றீர்கள்.

இரவில் நான் இவற்றை வீட்டிற்கு எடுத்துச் சென்று பாதுகாத்தேன் பகலில் மீண்டும் இவற்றை இங்கே நட்டேன். நீங்கள் சொன்னது போலவே நடந்து கொண்டேன். இவை ஏன் வாடி விட்டன! என்று எனக்கும் தெரியவில்லை" என்றான்.

இதைக் கேட்ட அரசர், இவனிடம் போய் இந்த வேலையைக் கொடுத்தோமே..." என்று தலையில் அடித்துக் கொண்டார்.

அப்பாடா தப்பித்தோம்! என பெருமூச்சு விட்டான் விவேகன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் அமைதியை இழக்காமல் இருப்பதற்கு, அனைத்து விடயங்களிலிருந்தும் விடுபட வேண்டும்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் அரசியல் இருக்கும்வரை எம்மிடையே ஒற்றுமைக்கு இடமில்லை

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்து ஒரு வாரம் கடந்துவிட்டது. எனினும் இன்னமும் உள்ளூராட்சி சபைக்கான ஆட்சியை யார் பொறுப்பெடுப்பது என்பதில் உடன்பாடு எட்ட முடியவில்லை.

உண்மை. யார்விட்டுக் கொடுப்பது, யாரோடு கூட்டுச்சேர்வது என்பதில் உடன்பாடு காண முடியாத நிலையில், ஆளுக்கு ஆள் அறிக்கை விடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

உண்மையைக் கூறப்போனால், தமிழர் அரசியலில் தமிழர்களின் நலன் தவிர்ந்த மற்றைய அனைத்தும் உண்டெனலாம்.

அதாவது தமிழ் மக்கள் - தமிழ் இனம் - தமிழர் உரிமை என்றெல்லாம் தமிழ் அரசியல் தரப்புகள் கூறுவது போலித்தனம். ஏமாற்று நாடகம். இதுவே சத்தியமான உண்மை.

எனினும் அப்பாவித் தமிழ் மக்கள் உண்மையைப் புரிந்து கொள்ளாமல், தத்தம் சிந்தனைக்கு எட்டியவாறு தமது ஆதரவை வழங்கிவருகின்றனர்.

இதை நாம் கூறுவது தமிழ் அரசியல்வாதிகள் மீது காழ்ப்புணர்வு கொண்டென்று யாரும் கருதிவிடாதீர்கள்.

மாறாக, தேர்தல் அரசியல் இருக்கும் வரை, தேர்தல் அரசியலில் தமிழ் அரசியல் தரப்புகள் ஈடுபடும்வரை, மேற்கூறிய ஏமாற்று நாடகங்கள் அரங்கேறிக் கொண்டே இருக்கும். இதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

ஆம் பாராளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளில் இருக்கக்கூடிய பதவிகள் மீது கொண்ட ஆசையும் அப்பதவிகளில் இருந்தால் பணம், வசதிகள், அதிகாரம், கௌரவம் என்பன கிடைக்கும் என்ற காரணத்தாலுமே எம் தமிழ் அரசியலானது இயங்கு நிலையில் உள்ளது.

ஆம், தேர்தல் அரசியலில் ஈடுபடமாட்டோம் என்று கூறக்கூடிய தமிழ் அரசியல்வாதிகள் இல்லாதவரை எங்களிடம் ஒருபோதும் ஒற்றுமை ஏற்படமாட்டாது.

ஆம், எங்களின் அரசியல் இயங்குநிலை அரசியல் பதவிகளுக்கானது. அந்தப் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே தமிழர் உரிமை பற்றிப் பேசப்படுகிறது இதுதான் சத்தியமான உண்மை.

இதையும் கடந்து தொகுதி ரீதியான தேர்தல் முறைமை இல்லாமல் ஆக்கப்பட்டு விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை அமுலுக்கு வந்ததன் பிற்பாடு, ஒரே கட்சிக்குள்ளேயே மோதல்களும் முரண்பாடுகளும் பிரிவுகளும் வலுப்பெற்றுள்ளன.

இந்தநிலைமை நமக்கு மட்டுமல்ல மாறாக தென்பகுதியிலுள்ள பிரதான அரசியல் கட்சிகளும் இதற்கு ஆளாகி தற்போது அவை கந்தறுந்து காவடி எடுக்கின்றன.

ஆக, தமிழ் அரசியல்வாதிகளே ஒற்றுமைப் படுங்கள். உள்ளூராட்சி சபைகளிலேனும் உங்களுடைய ஒற்றுமையை நிரூபித்துக் காட்டுங்கள் என்றெல்லாம் நாம் உரத்துக் கேட்கலாம். ஆனால் அது ஒருபோதும் சாத்தியமாகாது.

அதாவது, தேர்தல் அரசியலும் விகிதாசாரத் தேர்தல் முறைமையும் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்பட ஒருபோதும் அனுமதிக்காது. இதுவே நிதர்சனமான உண்மை.

# வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்க அனைவரும் ஒன்றுபட வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அழைப்பு

(கொழும்பு)

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்க அனைவரும் கைகோர்க்க வேண்டும். இதில் அரசாங்கம், எதிர்த்தரப்பு மற்றும் சிவில் சமூகத்துக்கு பொறுப்புகள் காணப்படுகின்றன. தமது பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுவதன் மூலம் படுகுழியில் இருந்து மீள முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மாத்தறை உராபொல ஸ்ரீ ரத்தனஜோதி பிரிவேனா வித்யாயதனத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடந்துவரும் நிகழ்வில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

2028ஆம் ஆண்டு நாட்டுக்கு தீர்க்கமான தொரு வருடமாகும். 2028 முதல் நாம் கடனை மீளச் செலுத்த வேண்டும். 2033ஆம் ஆண்டு முதல் கடனை திருப்பிச் செலுத்துமாறு IMF தெரிவித்தது.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கம் அதை 2028ஆகக் குறைத்து இணக்கப்பாட்டை எட்டியது.

எனவே, 2028ஆம் ஆண்டுக்குள் கடனை அடைக்க அதிக அளவிலான பொருளாதார வளர்ச்சி எமக்குத் தேவை. இதற்கு 5% பொருளாதார வளர்ச்சியைப் பேணிச் செல்ல வேண்டும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

அதற்கு அரச வருவாயை அதிகரிக்க வேண்டும். ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டுக் கையிருப்புக்களை அதிகரிக்க வேண்டும். இவற்றைச் செய்ய முடியாவிட்டால், நமது நாடு மீண்டும் ஒரு பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியான துயரத்தை நோக்கிச் செல்லும்.

இந்த யதார்த்தத்தை நாம் புரிந்துகொண்டு, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாட்டுக்கு மதிப்பு சேர்க்க வேண்டும். அரசியல், இன, மத அல்லது வர்க்க வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைவரையும் பாதிக்கும் என்றார். (ந-4,7)

# வாகன விபத்து; அறுவர் காயம்!

(கொழும்பு)

கதுருவெல நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டியொன்று, பொலநறுவை, மனம்பிடிய நகருக்கு அருகில் வைத்து மற்றொரு முச்சக்கரவண்டியை முந்திச் செல்ல முயன்றபோது, இரண்டு முச்சக்கரவண்டிகளும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதில் முச்சக்கர வண்டிகளில் பயணித்த மூன்று வயது சிறுமி உட்பட ஆறு பேர் காயமடைந்த நிலையில் பொலநறுவை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெசாக் கொண்டாடுவதற்காக பொலநறுவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஹசலக மற்றும் திம்புலாகல பகுதிகளைச் சேர்ந்த குழுவினரே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக மனம்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,4)

# தீயில் எரிந்த நிலையில் யுவதி சடலமாக மீட்பு

(கொட்டாவ)

வீட்டில் தனிமையில் இருந்த இளம் யுவதியொருவர் தீயில் எரிந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொட்டாவ, ருக்மல் கம வீதி, விஹார மாவத்தையில் உள்ள ஒரு வீட்டில் 19 வயதான இளம் யுவதி ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அவரது உடல் முற்றிலுமாக எரிந்துவிட்டதாகவும் வீட்டின் சொத்து மற்றும் கூரைக்கு சேதம் ஏற்பட்டதாகவும் உயிரிழந்த யுவதியின் தாயாரும் இரண்டு சகோதரர்களும் நேற்று இரவு (13) வீட்டை விட்டு வெளியில் சென்றிருந்த நிலையிலேயே குறித்த யுவதி தீ விபத்தில் சிக்கி உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தீயணைப்புப் படையினரும் அப்பகுதி மக்களும் தீயை அணைக்க முற்பட்ட நிலையிலும் யுவதி ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில் நுகேகொடை குற்றப்பிரிவு அதிகாரிகள் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-4,7)

# நீரில் மூழ்கி சிறுமியர் இருவர் உயிரிழப்பு

(குருநாகல்)

குருநாகல் பகுதியிலுள்ள கல்கமுவ, பாலுகடவல வாவியில் நீராடச் சென்ற இரண்டு சிறுமிகள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரும் அப்பகுதியில் உள்ள உறவினர் வீட்டிற்குச் சென்றுள்ளதோடு, நேற்று மதியம் நீராடுவதற்காக குறித்த வாவிக்குச் சென்றிருந்தபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

மரணித்த இருவரும் 12 மற்றும் 17 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,4)

# சூட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது

(கொழும்பு)

மீட்டியாகொட பொலிஸ் பிரிவின் தம்பஹிட்டிய பகுதியில் இருவரைச் சுட்டுக் கொன்ற சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மீட்டியகொட பொலிஸ் பிரிவின் தம்பஹிட்டிய பகுதியில் கடந்த 3ஆம் திகதி இரண்டு பேர் T56 ரக துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பில் மீட்டியாகொட பொலிஸாரும் காலி மாவட்ட குற்றப் பிரிவும் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில், இந்தக் குற்றத்திற்கு உதவியதற்காக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டு மீட்டியாகொட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நிந்தான பகுதியைச் சேர்ந்த 27 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. (ந-7,4)

# சீரணி நாகபூசணி தாயாரின் பூங்காவனத் திருவிழா நாளை

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் திருவருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான விசுவாவசு வருஷ வருடாந்த மகோற்சவத்தில் நாளை வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழா பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது

காலை 9.00 மணியளவில் அம்பிகைக்கு விசேட சங்காபிஷேகம் இடம்பெற்று மாலை 6.00 மணியளவில் வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து அம்பிகை அழகிய பூந்தண்டிகையில் ஆரோகணித்து விசேட நாதஸ்வர தவில் நாதங்கள் முழங்க பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார்

தொடர்ந்து 9.00 மணியளவில் மகோற்சவத்தை முன்னிட்டு ஆலய இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா இடம் பெறவுள்ளது. (ந-7,4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 11.05.2025 முதல் 26.05.2026 வரை

50/100



**மிதுன இராசி நேயர்களே!**

இதுவரை உங்கள் ராசிக்கு 12ஆம் இடமான ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான். 11.5.2025 அன்று உங்கள் இராசியில் அடியெடுத்து வைக்கிறார். இந்த ஜென்ம குருவின் ஆதிக்கத்தால் இட மாற்றங்கள், ஊர் மாற்றங்கள் வரலாம். இருப்பினும் குரு பார்க்கும் இடங்களைப் பொறுத்து நல்ல பலன்கள் நடைபெறும் என்பதால் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

**குரு இருக்கும் இடத்தின் பலன்**

குருபகவான், உங்கள் இராசிக்கு 7,10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர். இப்பொழுது அவர் தன் வீட்டைத் தானே பார்க்கிறார். எனவே 7ஆம் இடம் புனிதமடைகின்றது. ஜென்மத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் வரலாம். அதிக உழைப்பும், அலைச்சலும் உருவாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது.

"ஜென்ம ராமர் வனத்திலே" என்று சொல்வார்கள். ஜென்மத்தில் குரு வந்தாலும் அதற்காக நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. மற்ற கிரக அமைப்புகளைப் பொறுத்து பலனில் மாற்றங்களும், ஏற்றங்களும் வரலாம். வீண் விரயங்கள் வராமல் இருக்க சுப செலவுகளை மேற்கொள்ளுங்கள். எதையும் சிந்தித்து ஏற்றுக் கொள்வது நல்லது. யோக பலம் பெற்ற நாளில் தென்முகக் கடவுளுக்குரிய ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து வழிபடுவது நல்லது.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக குரு பகவானுடைய பார்வை உங்கள் ராசிக்கு 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே அந்த இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன. பூர்வப் புண்ணியஸ்தானத்தை குரு பார்ப்பதால் சகல யோகங்களும் உங்களுக்கு வந்து சேரும். குருவின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பிள்ளைகளால் பெருமை சேரும். பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். குருவின் பார்வை 7ஆம் இடத்தில் பதிவதால் குடும்பத்தில் மங்கல ஓசை கேட்க வழிபிறக்கும்.

வாடகைக் கட்டடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். ஊர் மாற்றத்தையோ, வீடு மாற்றத்தையோ எதிர் பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு அது கைகூடும். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். 9 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் ஒளிமயமான எதிர்காலம் உருவாகும். பொன், பொருள் சேர்க்கை உண்டு. பொருளாதாரம் திருப்தி தரும். பெற்றோர்களின் ஆதரவு தக்க சமயத்தில் கைகொடுக்கும். கூட்டு முயற்சிகளிலிருந்து விலகி, தனித்து இயங்கலாமா என்று யோசிப்பீர்கள். பணி புரியும் இடத்தில் ஊதிய உயர்வும், கேட்ட சலுகைகளும் கிடைக்கலாம்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

11.5.2025 முதல் 9.6.2025 வரை மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் வரலாம். உறவினர் பகை அதிகரிக்கும். உள்ளத்தில் நினைத்ததை உடனுக்குடன் செய்ய இயலாது. தைரியமும், தன்னம்பிக்கையும் குறையும்.

திருவாதிரை நட்சத்திரக் காலில் ராகு சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது 10.6.2025 முதல் 7.8.2025 வரை நல்ல




பலன்கள் இல்லம் தேடி வரும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் ஏற்பட்ட மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரப் போட்டிகள் அகலும் உத்தியோகத்தில் உங்கள் திறமை பளிச்சிடும். மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர், பிள்ளைகளின் வருங்காலக் கனவுகளை நிறைவேற்றி வைப்பீர்கள்.

புனர்பூசம் நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது 8.8.2025 முதல் 25.5.2026 வரை எதிர்பார்த்த காரியங்கள் எளிதில் நிறைவேறும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். புதிய தொழில் தொடங்கும். திட்டங்கள் நிறைவேறும். இக் காலத்தில் மிதுனத்தில் மட்டு மல்லாமல் கடகத்திலும் குரு சஞ்சரிக் கின்றார். கடகத்தில் குரு உச்சம் பெறுவதால் தலைமைப் பதவிகள் தானாக வந்து சேரும்.

**குருவின் அதிசாரப் பெயர்ச்சி**

8.10.2025 அன்று குருபகவான் கடக ராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். அங்கிருந்து கொண்டு உங்கள் ராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். குரு உச்சம் பெற்றுப் பார்ப்பதால் அந்த இடங்களுக்குரிய ஆதிபத்யங்கள் அத்தனையும் ஆச்சரியப்படும்படி நடைபெறும். குறிப்பாக ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். இதுவரை ரண சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்ன மருத்துவர்கள் இப்பொழுது சாதாரண சிகிச்சையிலேயே குணப்படுத்தி விடுவர். பொருளாதாரம் உச்சநிலை அடையும்.

தொழில் ஸ்தானம் பலப்படுவதால் மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்புவிழா நடத்துவீர்கள். சென்ற குருப்பெயர்ச்சியில் ஏற்பட்ட விரயங்களை சமாளிக்க இப்பொழுது சந்தர்ப்பங்கள் வந்து கொண்டேயிருக்கும். இடம் வாங்கி வீடு கட்டுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்றவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களில் இருந்த தட்டுப்பாடுகள் அகலும்.

**சனிப்பெயர்ச்சி**

6.3.2026 அன்று சனி பகவான் கும்பராசியில் இருந்து மீன ராசிக்குப் பெயர்ச்சியாகிச் செல்கிறார். 10ஆம் இடத்திற்கு வரும் சனிபகவான் முத்தான பலன்களை வழங்குவார். என்றாலும் கர்ம ஸ்தானம் என்பதால் கொஞ்சம் கவனம் தேவை. பெற்றோர்களின் உடல் நலத்தில் பாதிப்புகள் ஏற்படலாம். பழைய தொழிலை விட்டு விட்டு, புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக வருமானப் பற்றாக்குறை அகலும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். பொறுமையோடு செயற்பட்டு பெருமை காண்பீர்கள். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். பெற்றோர்களின் உடல்நலத்தில் மிகுந்த கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றங்கள் எதிர்பாராத விதத்தில் வரலாம். குருவின் வக்கிர காலத்தில் அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் கிடைக்கும்.

## வருவது ஜென்ம குருவாகும்! வழிபாட்டால் வளம் சேரும்!

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப் படுகொலை...

கனடாவில் உருவாக்கப்பட்டுள்ள "தமிழர் இனப் படுகொலை நினைவுத் தூபி" தொடர்பில் கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் இதனைத் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப் புலிப் பயங்கரவாதி களுடனான மோதலில் எந்த இனப் படுகொலையும் சர்வதேச சட்டத்தின் கீழ் நிரூபிக்கப்படவில்லை.

அவ்வாறு நிரூபிக்கப்பட முடியாத நிலையில், கனடா தமிழர், இனப் படுகொலை நினைவுச்சின்னத்தைத் திறந்து வைத்துள்ளமை கவலைக் குரியது.

இலங்கை அரசாங்கம் உடனடி யாக கனேடிய உயர் ஸ்தானிகரை அழைத்து முறையாக எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும்.

ஒரு சட்டபூர்வமான போரின் பின் னணியில் ஒரு தவறான இனப்படு கொலைக் கதையை ஊக்குவிப்பது வரலாற்றைத் திரிபுபடுத்துவது மட்டு மல்லாமல், அது இலங்கையில் நல் லிணக்கச் செயல்முறைக்கு கடுமை யான அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும் என்றார். (ந-7,4)

## தனது மகளை...

வந்துள்ளது.

இதனையடுத்து குடும்பத்தினர் சிறுமியை உடனடியாக வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்றுள்ள னர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட வைத் திய பரிசோதனைகளில் சிறுமி இறுதி யாக உட்கொண்ட உணவில் கிருமி நாசினி கலந்திருப்பது கண்டறியப் பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள சிறுமி தற்போது யாழ்.போதனா வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் தந்தை தலைமறைவாகி யுள்ளார்.

அவரைக் கைது செய்வதற்கான நட வடிக்கைகளை இளவாலைப் பொலி ஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7,4)

## மின் கட்டணத்...

மின்சார சபையின் ஊழல் மோசடி கள் மற்றும் வீண் விரயத்தை குறைப் பதன் மூலம் 30 வீதமளவில் மின் கட்டணத்தைக் குறைக்க முடியும் என தேசிய மக்கள் சக்தி மக்களிடம் உறுதிமொழி வழங்கியது.

எனினும் இந்த உறுதிமொழி தற் போது பொய்த்துப் போயுள்ளது.

இலங்கை மின்சார சபையின் செலவை விடவும் கட்டணத் தொகை குறைவாகக் காணப்படுவதனால் நட் டம் ஏற்படுகின்றது.

மின்சார உற்பத்திக்கான செலவு களைக் குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வும் இதனைப் போட்டித்தன்மை அதி கரிப்பு ஊடாக மேற்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-7,4)

## நயினை பாதைப்...

காரணமாக நயினாதீவு இறங்கு துறை யில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வீசிய பலத்த காற் றின் காரணமாக நீரில் மூழ்கியது. (ந-7,4,33)

## ரணில் போல்...

நாயக்கவுக்கு கிடையாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரு மான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் மத வழிபாட்டில் ஈடு பட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

பெரும்பான்மைப் பலம் உள்ளது என்ற ஆணவத்தில் அரசாங்கம் தான்தோன்றித்தனமாகச் செயற்படு கிறது. 2020ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ஷ அரசாங் கத்துக்கும் பெரும்பான்மைப் பலம் இருந்ததையும், அந்தப் பலம் இரண் டாண்டுக்குள் பலவீனமடைந்ததை யும் அநுர அரசாங்கம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந் தத்தைப் பாராளுமன்றத்துக்குச் சமர்ப் பிப்பதாயின் அதற்கு இந்தியாவின் அனுமதியைப் பெற வேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவது வேடிக்கை யாகவுள்ளது.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட் டுள்ள பாதுகாப்புத் தொடர்பான புரிந் துணர்வு ஒப்பந்தத்தை இந்த அரசாங் கம் பகிரங்கப்படுத்தும் என்ற நம் பிக்கை கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா தொடர்பான ஒருசில விடயங்களில் தற்துணிவுடன் செயற்பட்டார். அந்த தற்துணிவு ஜனாதி பதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு கிடையாது.

சர்வதேச நாணய நிதியத்தின் விவகாரத்தில் அரசாங்கம் நாணய நிதியத்தின் சகல நிபந்தனைகளுக் கும் அடிபணிந்துள்ளது.

மின் கட்டண அதிகரிப்பு ஊடாக இதனை எதிர்வரும்மாதமளவில் விளங் கிக்கொள்ள முடியும் என்றார். (ந-7,4)

## உயிர்காத்த...

மாய்த் திகழ்ந்த தனலக்சுமி தாயின் உடல் நேற்று அவர்களது சொந்த ஊரான கொஸ்லாந்தை மீறியபெத்த பகுதியில் கணவரது உடலுடன் நல் லடக்கம் செய்யப்பட்டது. (ந-7,4)

## தமிழ்த் தேசியக்...

செயற்பாடுகளுக்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட் டது.

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அதனை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தடை செய்திருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தடை செய்யாமல் அலட்சியப்படுத்தி யது மகிந்த ராஜபக்ஷ செய்த அரசி யல் ரீதியான தவறாகும். யுத்தம் முடி வடைந்ததன் பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் கடந்த காலங்களை மறந்து இயல்பு வாழ்க் கைக்குத் திரும்பினார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது அரசியல் இலாபத்துக்காக அரசியல் அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசி தேவையில்லாத பிரச்சினைகளை ஏற்படுத்தி, இனங் களுக்கிடையில் முரண்பாட்டை உரு வாக்கியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் பிரிவினைவாதத்தை மீண்டும் தோற்றுவிக்கும் செயற்பாடுகள் தற் போது இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. அரசியல் பிரபல்யத்துக் காகத் தேசியத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் அடிப்படை தேவைகள் சார்ந் டைய விடயங்களை அலட்சியப் படுத்துவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும் கனடாவில் பிரம்டன் நக ரில் சிங்கௌசி பொதுப் பூங்காவில் நிர் மாணிக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் தொடர்பில் இலங்கை அர சாங்கம் கடும் அதிருப்தியை வெளிப் படுத்த வேண்டும். யுத்தம் முடிவடைந் ததன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை மகிந்த ராஜபக்ஷ தடை செய்திருந்தால் பல பிரச்சினைகளுக் குத் தீர்வு கண்டிருக்கலாம் என்றும் சரத் வீரசேகர தெரிவித்தார். (ந-7,4)

# தனியார் ஜெட்களில் பறக்கும் அநுரவின் தேர்தல் வாக்குறுதி

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க விமானங்களில் அதி சொகுசு இருக்கைகளில் கூட பயணிக்க மாட் டேன் என உறுதிமொழி வழங்கி ஆட்சி பீடமேறிவிட்டு, இன்று தனி யார் ஜெட்களைப் பயன்படுத்தி பய ணங்கள் மேற்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே தெரி வித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மோசமான முறையில் சிறப்புரிமைகளை அனுபவித்தார் என தேர்தல் மேடைகளில் குற்றம் சுமத்தி அவர்போல் அல்லாமல் விமானங் களில் வர்த்தக வகுப்பு இருக்கை களில் பயணிப்பதில்லை எனவும் சிக்கன வகுப்பு இருக்கைகளில் பயணிப்பதாகவும் உறுதியளித்த ஜனாதிபதியே இன்று தனியார் ஜெட் களில் பயணம் செய்கிறார்.

ஜனாதிபதி அவ்வாறு உறுதி மொழி வழங்கவில்லை என யாரேனும் கூறினால் நான் அந்த ஒளிப்பதிவு களைக் காண்பிக்கத் தயார்.

தனியார் ஜெட் எவ்வாறு கிடைத் தது யார் அதற்கு அனுசரணை வழங் கினார்கள் என்பது குறித்து இதுவரை யில் யாரும் பதிலளிக்கவில்லை.

அன்று ராஜபக்ஷகளுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை விடவும் இந்த அரசாங்கத் தரப்பின ருக்கு எதிராக பத்து மடங்கு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7,4)

## ஊழல் மோசடி...

எனவே முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்வதற்கு அதற்குப் பொருத்தமான, ஊழல் அற்ற, வெளிப் படை தன்மையுடனான வர்த்தக சூழலை உருவாக்குவதற்கு இலங்கை அர சாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என "பாத்பைண்டர்" அமைப் பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வட்டமேசைக் கலந்துரையாடலொன்றி லேயே ஜப்பான் தூதுவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

ஊழல், மோசடிகளால் இலங்கை அரசாங்கம் பாரிய நெருக்கடிகளை சந்தித்திருக்கின்றது. இவ்வாறான நிலைமைகளை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்காகத் தற் போதைய அரசாங்கம் பொருத்தமான வழிமுறைகளைப் பின்பற்றும் என்று நம்புகின்றோம்.

இலங்கையில் முதலீடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நட வடிக்கைகளின்போது சில ஜப்பான் நிறுவனங்கள் வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்த போது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலஞ்சம் வழங்குதல், தரகுப்பணம் வழங்குதல் உள்ளிட்ட மோசடிக ளுக்கு இடமளிக்கவில்லை.

இதற்கு முன்னர் ஜப்பான் நிறு வனங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. இந்து சமுத் திரத்தில் முதலீட்டு வாய்ப்புக்களை ஆராயும்போது இலங்கைக்கு மிக முக்கிய இடம் காணப்படுகிறது. எனினும் நியாயமான நம்பிக்கை மிக்க, வெளிப்படை தன்மையுடைய வர்த்தகச் சூழலை இலங்கையில் அவதானிக்கக் கூடியதாக இல்லை.

ஜப்பான் நிறுவனங்கள் பலவும் இவை தொடர்பில் சுட்டிக்காட்டியிருக் கின்றன. ஊழலை ஒழிக்கும் இலக்கு டன் ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க நடவடிக்கைகளை முன்னெ டுத்திருக்கின்றமை மகிழ்ச்சிக்குரியது. இவ்வாறான ஊழல் ஒழிப்புத் திட்டங் கள் முன்னெடுக்கப்படுவது அத்தியா வசியமானது என்று நாம் நம்புகின் றோம்.

பல்வேறு வழிகளிலும் இலங்கை யானது ஜப்பானுக்கு மிக முக்கிய மான பங்காளியாகவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப் பாட்டு ஒப்பந்தம், கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்துடன் இலங்கையின் பொரு ளாதாரம் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறது.

அந்த வகையில் இனிவரும் காலங் களில் ஜப்பானின் முதலீட்டுத் திட்டங் களை இலங்கையில் முன்னெடுப்பது குறித்து ஆராயப்படும். எனவே அதற் குப் பொருத்தமான சூழலை இலங் கையில் உருவாக்குவதற்காக அர சாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என்றார். (ந-7,4)

## முள்ளிவாய்க்...

யானது இன்று புதன்கிழமை (14) காலை 9 மணியளவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந் துள்ள தியாக தீபம் திலீபனின் நினை விடத்திலிருந்து ஆரம்பமாகித் தாய கப் பகுதியின் பல்வேறு இடங்களுக் கும் பொதுமக்களின் அஞ்சலிக்காகச் செல்லவுள்ளது. (ந-7,4)

## மீண்டும்...

தேர்தலில் மார்க் கார்னி தலைமை யிலான தரப்பு வெற்றி பெற்ற நிலை யில் புதிய அமைச்சரவை நியமனங் கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கார்னி 28 அமைச்சர்களை அமைச் சரவைப் பதவிகளுக்கும் மேலும் 10 பேரை வெளியுறவுச் செயலாளர் களாகவும் நியமித்துள்ளார். (ந-7,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் விருப்பத்துக்கு இணங்கவே அதிகாரம் அமையப் பெறல் வேண்டும்

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்குத் தடை ஏற்படுத்தினால் அதற்கான பதிலடி கொடுக்கப்படும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.


இது குறித்து மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்ற தேசிய மக்கள் சக்திக்கு ஆட்சி அமைக்க எதிர்க்கட்சிகள் தடையினை ஏற்படுத்தினால் அதே போன்று எதிர்க்கட்சிகளுக்கும் எதிர் தாக்கங்கள் ஏற்படலாம்.

மக்கள் விருப்பத்திற்கிணங்க அதிகாரம் அமைய வேண்டும் என்றும், அதில் இடையூறு ஏற்படுத்தக் கூடாது

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் மிகப்பெரும் வெற்றியைப் பெற்றது தேசிய மக்கள் சக்தியே எனவும் நாம் 267 சபைகளில் வெற்றி பெற்றுள்ளோம். அதில் 120 இடங்களில் எந்தவொரு சிக்கலும் இல்லாமல் சபைகள் அமைக்கலாம்

அத்துடன், 32 சபைகளில் ஆளும் மற்றும்



எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் சமமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், அங்கும் பிரச்சினை இல்லாமல் சபைகள் அமைக்க முடியும்

"சமகாலத்தில் சில கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு, தற்போது இணைந்து சபைகள் அமைக்க முயற்சி செய்வது ஒழுக்க விதிகளுக்கு முரணானது எதிர்க்கட்சிகள் சபை அமைப்பைத் தடுப்பதை நிறுத்த வேண்டும்,"

ஐக்கிய மக்கள் சக்தி14 சபைகள் பெற்றிருந்தாலும், அவற்றில் 13 இடங்களில் தனியாக சபைகள் அமைக்க முடியாத நிலைமை உள்ளது. மற்றக் கட்சிகள் ஒன்றிணைய முடியாமல் உள்ளதால், பல இடங்களில் அதிகாரம் அமைப்பது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கே சாதகமாக உள்ளது என்றார். (ந-4,7)

வியத்துகள் அதிகம்

# இடம்பெறும் பகுதிகளை இனங்கண்டு அறிக்கையிடுக

## பதில் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை

வாகன விபத்துகள் அடிக்கடி நிகழும் பகுதிகள் மற்றும் விபத்துகள் ஏற்படும் அபாயமுள்ள இடங்களைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஒத்துழைப்பைப் பெறுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம் இரவு நேரங்களில் பயணிக்கும் வாகனங்களைச் சோதனையிடுவதற்கு ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியமர்த்தப்பட வேண்டும் எனவும் பதில் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (ந-4,7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2958)

076 825 7716 (ஆகாஸ்)

**வேலைவாய்ப்பு**

சாரதி, பாதுகாப்பு உத்தியோத்தர், வெயிட்டர், உதவியாளர், கிளீனிங், சமையல், வெல்டர், விற்பனையாளர், கிளாக், காசாளர் போன்ற வேலையாட்கள் தேவை. (4173)

076 098 4532/077 773 3368

**வேலையாட்கள் தேவை**

- மேசன் - Rs. 3000.00 - 3500.00
- மேசன் உதவியாளர் - Rs. 2500.00 - 2700.00
- வெல்டர் - Rs. 3000.00 - 3500.00
- தச்சு வேலை - Rs. 3000.00 - 3500.00
- பெயின்ரர் - Rs. 2500.00

(தேவையேற்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.) (4174)

யாழ்ப்பாணம் 077 724 5399 (காலை 8.00 - மாலை 6.00 வரை)

**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

**பணிப்பெண் தேவை**

பருத்தித்துறையில் உள்ள வீடொன்றில் வீட்டு வேலைகளைச் செய்து இரண்டு பிள்ளைகளைப் பராமரிக்க பணிப்பெண் தேவை.
வயது : 40 - 50
பணி நேரம் : காலை 7.00 – மாலை 5.00 (4181)
077 459 7938
075 712 7528

**கனடா - வரி இல்லாமல்**
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குன்றந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237 (C-2959)


**31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**



பிறப்பு 26 . 01 . 1941

இறப்பு 14 . 04 . 2025

திருமதி

**மார்க்கண்டு மரியம்மா**

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து எம் துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி மற்றும் சமூகவலைத்தளங்களில் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தியவர்களுக்கும் கண்ணீரஞ்சலி, துண்டுப்பிரசுரம், பதாகைகளை வழங்கியோருக்கும் அத்துடன் 31ம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் இரு கரம் கூப்பி மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
திரு.திருமதி உதயமோகன் (1121)


இப்படிக்கு:
குடும்பத்தினர்

**1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர்
**தங்கரத்தினம் (ரதி) தம்பிஜயா**

அன்னை மடியில் 10.10.1947

ஆண்டவன் அடியில் 26.04.2024



மண்ணுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறை தெய்வமாய் எம்மை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும் எங்கள் அன்பு அம்மாவுக்கு எங்கள் இதய அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.

ரதி கோட்டம்
முதலியார் வளவு,
சுன்னாகம்.

இங்ஙனம் -
குடும்பத்தினர் (4182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.